பக்கங்கள்-16 | 04.ஆனி.2023 | விலை–50.00




# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –416



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த நகர்வு ஆபத்தானது




## பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருந்த போதே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது – அம்பிகா சற்குணநாதன்




## யாழ் நூலக எரிப்பு : உண்மைகளும் மாயைகளும் நினைவுக் குறிப்புகள்



## இராணுவத் துணைக்குழுக்களால் கிழக்கில் வைத்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த நகர்வு ஆபத்தானது



இந்த நாட்டில் பொருளாதார பிரச்சினை, இனவாத மதவாதப் பிரச்சினை என யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் நிலைமைகள் தலைகீழாக மாற்றம் பெற்றுள்ளது. நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றப்படாமல் கடந்த காலங்களைப் போலவே பயணித்தால், உற்பத்திகள் குறைவடைந்து, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் முற்றாகத் தடை செய்யக்கூடிய அளவிற்கு நிலைமைகள் எதிர்காலத்தில் மோசமடையக்கூடும். டொலர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகக் கூறி தொடர்ந்தும் இறக்குமதிப் பொருட்கள் பல இன்றும் தடை செய்யப்பட்டுள்ளன. வாகன இறக்குமதி இன்னமும் செய்யப்படவில்லை. இந்த நாட்டுக்குள் பொருளாதார ரீதியான வணிக நடவடிக்கைகளை தொடர்ந்தும் வினைத்திறனாக முன்னெடுக்கின்றபோதுதான் இந்த நாடு சுபீட்சமான நிலையை அடையும்.

பூகோளரீதியாகஉலகநாடுகள் இலங்கைக்குள் கால் பதிக்கவே முற்படுகின்றன. தங்களுடைய முதலீடுகளை இந்த நாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலம் தமக்கான ஆதாயத்தைப் பெற்றுக்கொள்வதே அவர்களது நோக்கம். இன்று ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையினைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிற நிலைப்பாட்டில், பல்வேறு சிக்கல்களுடன் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காய்நகர்த்தல்கள் ஒவ்வொன்றும் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடுகளிடமிருந்து கடன்களைப் பெற்று மீண்டும் இந்தக் கடன்களை எவ்வாறு அடைப்பது என்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை. பொருளாதார முகவர்களை இந்த நாட்டுக்குள் கொண்டுவருவதன் ஊடாக அதனைச் செய்யமுடியும்.

டயஸ்போறாக்களும் ஒரு சவாலை முன்வைத்திருக்கிறார்கள். அதாவது எங்களுக்கான அங்கீகாரத்தை இலங்கை அரசாங்கம் வழங்குமாகவிருந்தால் ஒரு வருடத்திற்குள் இந்த நாட்டினை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றிக்காட்டுகிறோம் என்று. டயஸ்போறாக்களின் பல அமைப்புக்கள் இன்னமும் இலங்கை அரசின் தடைப்பட்டியலில் தான் இருக்கின்றன.

யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகளைக் கடந்துள்ள இந்த நிலையில் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்கிற முத்திரையைக் குத்தி இன்னமும் தடைப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் விடுதலைப்புலிகளின் காலத்தில் வன்னிப் பகுதியில் இருந்த வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் இன்று புலம்பெயர்ந்து வாழுகின்ற போதும் மீண்டும் இலங்கைக்கு வந்து வன்னிப் பிரதேசங்களில் முதலீடுகளைச் செய்வதில் அரசால் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை தொடர்கின்றது. அவர்கள் விசாரணை என்கிற பெயரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அரச படைகளால் கைது செய்யப்படக்கூடும். விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையினை இலங்கை அரசாங்கம் நீக்குகின்றபோதுதான், பெரும் முதலீட்டாளர்கள் தடையின்றி இலங்கைக்குள் வரமுடியும் என்பதே உண்மை.

ஐரோப்பிய நாடுகளில் இன்று இலங்கையர்கள் பலர் பெரும் வணிகர்களாக தொழிலதிபர்களாக இருக்கிறார்கள். இன்னும் இந்தத் துறைக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். இவர்களால் இலங்கையின் பொருளாதாரத்தை சீர்செய்ய நிச்சயமாக இயலும். அவர்களுடன் அரசாங்கம் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் இங்கு வந்து தமது முதலீடுகளை இலங்கையில் செய்வதற்குத் தேவையான விடயங்களை அரசு செய்யவேண்டும். வெறுமனே சீனா, இந்தியா, அமெரிக்காவின் உதவியை மாத்திரம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால் எதிர்கால இலங்கை காணாமல் போகுமே தவிர, வேறொன்றும் இல்லை. ஆசியாவின் அதிசயம் இன்று இம்மூன்று நாடுகளின் பிடிக்குள் அகப்பட்டுள்ளது.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வினை வழங்க இந்த அரசும் தயாராக இல்லை. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தரப்பு என்ன செய்கின்றது. செய்யப்போகின்றது என்கிற கேள்வியும் எழுகின்றது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள், 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று 12 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன், பிளவு பட்டிருக்கிறது. இந்தக் கட்சிகள் இன்று வடகிழக்கு இணைந்தது தமிழர் தாயகம் என்கிற நிலைப்பாட்டில் இருந்து மாறுபடுகிற சூழல் ஏற்பட்டுள்ளது. ஐக்கியமக்கள்சக்தியா அல்லது பொதுஜன பெரமுனவா என்கிற சூழல் தான் மக்கள் மத்தியில் இன்று இருக்கும் நிலைப்பாடு. ஐக்கிய தேசியக் கட்சி பலமிழந்திருப்பதைக் காண முடிகிறது.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாட்டுடன் தான் தமிழ் மக்களின் போராட்டமும் இடம்பெற்றது. இதனால் தான் இன்று புலம்பெயர்ந்த தமிழர்களும் தலைநிமிர்ந்து வாழ்கின்றனர். யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இருக்கக்கூடிய தமிழ்த் தரப்புக்கள் அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் போராட்டங்களை மேற்கொள்ளவேண்டும். இன்று முள்ளிவாய்க்கால் நினை வேந்தலைக் கூட சரிவரச் செய்ய முடியாத அளவிற்கு அரச படைகள் தடுக்கின்றன. தமிழர் நிலமெங்கும் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாவீரர்களுக்கான அஞ்சலி செலுத்த முடியவில்லை. நல்லாட்சியில் தமிழ்த் தரப்பினை நம்பவைத்து கழுத்தறுத்த நாடகங்களைத் தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் செய்தார்கள். ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படும் என்கிற நிகழ்ச்சிநிரலின் கீழ் வடகிழக்கில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் தமிழ்த் தரப்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவியினைப் பெற்று சந்தோசமாக இருந்தது மாத்திரம் தான் மிச்சம்.

இன்று அஹிம்சைப் போராட்டங்களுக்கும் தடை விதிக்கப்படுகிறது. போராட்டங்கள் என்பது ஜனநாயக உரிமையாகும். அதனைக் கூட தமிழ் மக்கள் செய்ய முடியவில்லை. அரச படைகளின் உதவியுடன் தமிழ் மக்களை அடக்கியொடுக்கும் வேலைத்திட்டத்தை அரசு செய்கின்றது. ஆனால் அரசுக்கு கடந்த காலங்களில் ஆதரவு வழங்கிய தமிழ்த் தரப்பிற்கும் அரச ஒட்டுண்ணிகளாக இருக்கும் தமிழ்த் தரப்புக்கும் ஒன்றுமே செய்ய முடியவில்லை. வெறுமனே வேடிக்கை பார்ப்பதும் அறிக்கை விடுவதும் ஊடகங்களில் செவ்வி கொடுப்பதுவுமே இவர்களின் வேலையாக இருக்கிறது.

இன்று வடக்கு கிழக்கில் பௌத்த திணிப்பு ஏற்படுத்தப்படுகின்றது. இராணுவ முகாமொன்றுக்காக நிலையான பௌத்த விகாரை பாரிய அளவில் தமிழர் பிரதேசங்களில் அமைக்கப்படுகின்றது. பின்னர் சிங்களக் குடியேற்றங்கள் அங்கே வருகின்றது. இது ஒரு திட்டமிட்ட இனவழிப்பாகும். தையிட்டியில், நாவற்குழியில், குருந்தூர் மலையில், செம்மலையில், நெடுங்கேணியில், திருக்கோணேச்சரத்தில் என பௌத்த ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றது.

நாட்டினுடைய பொருளாதாரத்தை சீர்செய்கின்றறோம் என்கிற போர்வையில் நாட்டின் ஜனாதிபதி தமிழ் மக்களை ஆபத்தான கட்டம் நோக்கி அழைத்துச்செல்கிறார். இன்றைய ஜனாதிபதி தேர்தலுக்காக தனது அரசியலை நகர்த்திக்கொண்டிருக்கிறார். ஏற்கனவேபலமிழந்துபோயுள்ளதனது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் தனது உயர் பதவியினைக் கொண்டு பலம் பெறவைக்கும் நோக்குடன் தமிழ்த் தரப்பினையும் உள்வாங்கும் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகிறது.

இன்று மாகாண சபைத் தேர்தலும் இல்லை, இதோ நடைபெறப்போகின்றதாகக் கூறிய உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலும் இன்று இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளது. இன்று மீண்டும் வடக்கின் ஆளுநராக பி.எஸ். எம்.சாள்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவியில் இருந்த சாள்ஸ் அவர்கள் திடீரென அப்பதவியில் இருந்து இராஜினாமா செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு காட்டிய விசுவாசத்திற்குப் பலனாக இன்று அவருக்கு ஆளுநர் பதவி வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் இவர் ஜனநாயகத்திற்கு முரணாக செயற்பட்டிருக்கின்றார் என்பதே உண்மையாகும். இந்த ஆளுநர் விடயத்தில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். அண்மையில் இந்த நியமனத்திற்கு எதிராக யாழில் போராட்டங்கள் நடந்தது. இவர் செய்த ஊழல் விபரங்கள் எவை என பட்டியலிடப்பட்டு அந்த போராட்டம் நடைபெற்றது. குறித்த விடயங்கள் விசாரணை செய்யப்படவேண்டும். அவ்வாறு விசாரணை செய்யப்பட்டு விடயங்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவருக்கான தண்டனையைக் கூட அரசு வழங்குமா என்பது கேள்விக்குறியே.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு போனஸ் ஆசனத்தின் மூலமாக பாராளுமன்றத்திற்கு அனுப்பியவர் தான் இந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள். அவர் பிரதமராகி பின்னர் இன்று ஜனாதிபதியாகவும் வந்துள்ளார். இன்று நிதியமைச்சராக இருக்கும்ஜனாதிபதி ரணில் அவர்கள், சர்வதேச நாடுகளிடமிருந்து கடன்களைப் பெறுவதன் மூலமாக நாடு ஏதோ மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டது அல்லது பொருளாதார ரீதியாக முன்னேற்றம் காணப்போகின்றது என்று பலர் நினைக்கக்கூடும். ஆனால் உண்மையில் இவ்வாறு அவர் செய்வதன் பிரதான நோக்கமே தனது கட்சியைப் பலப்படுத்துவதேயாகும். மீண்டும் மீண்டும் கடன்களைப் பெற்று இந்த நாட்டினை குட்டிச்சுவராக்குவதே இவர்களின் நோக்கம். வடக்கில் இல்லாத வளங்களே இல்லை. எம்மிடம் இல்லாத கடல் வளம் வேறு நாடுகளிடம் இல்லை. இத்தனை வளங்களையும் நாம் வைத்திருக்கின்றபோதும் இன்றும் அயல் நாடுகளிடம் கடன்களைப் பெற்று பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு நாம் வந்தததற்கு காரணம் இந்த அரசியல்வாதிகளே.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தொடரும் ஊடக அடக்குமுறை

ஊடகத்துறை என்பது இலங்கையை பொறுத்தமட்டில் மாத்திரமல்ல உலகளவில் ஆபத்து நிறைந்ததொரு பணியாகவே பார்க்கப்படுகிறது. ஆட்சி அதிகாரத்திலிருக்கும் அரசால் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக ஊடகப் பணியாளர்கள். ஊடகவியலாளர்கள். ஊடக நிறுவனங்கள் குரல் கொடுக்கின்றபோது அவர்கள் அரச படைகளால் கொலை செய்யப்படுகிறார்கள். விசாரணை என்கிற பெயரில் தடுத்து வைக்கப்படுகிறார்கள். காணாமல் போகச் செய்யப்படுகிறார்கள். இன்னும் சிலருக்கு என்ன நடந்தது என்பதே இதுவரை கண்டறியப்படவில்லை.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வடக்கு கிழக்கு ஊடகப் பணியாளர்கள் மாத்திரமல்ல. தென்னிலங்கை ஊடகத்துறையினரும் தற்போதைய சூழலை விட கடந்த காலங்களில் பாரிய அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது. தற்போது முப்படைகளைக் கொண்டு ஊடகப் பணியாளர்கள் கண்காணிக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் கைது செய்யப்படுவதும் தொடர்கின்றபோதிலும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் ஊடகவியலாளர்கள் பாரிய நெருக்கடியினைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது.

தற்போதைய சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தந்திரமாக ஊடகவியலாளர்களைக் கையாள்கிறது. இராணுவமும் புலனாய்வுப் பிரிவினரும் நேரடியாகக் களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளார்கள். பல பிரதேச செயலகங்கள் ஊடகவியலாளர்களை அங்கு நடைபெறும் மக்கள் தொடர்பான மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களுக்கே அனுமதிப்பதில்லை. நான்கு சுவர்களுக்குள் கலந்துரையாடப்படும் மக்கள் நலன் குறித்த முக்கிய விடயங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுவதில் சிக்கல் நிலை தொடர்கின்றது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கிற ஒன்றை தற்போதைய அரசு கொணர்ந்து அதன் மூலமாக ஊடகப் பணியாளர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் துணிந்துள்ளது. தந்திரமாக அடக்கியொடுக்கும் வேலைத்திட்டங்கள் மற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊடகவியலாளர்களுக்கு என்று எந்தவித பாதுகாப்பும் இந்த நாட்டில் மாத்திரமல்ல. உலக நாடுகளிலும் கிடையாது. ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்தை முடக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் உருவாக்க திட்டமிட்டுள்ளது. ஊடகங்களுக்கு எதிரான இவ்வாறான அடக்குமுறைகளை அனைவரும் இணைந்து எதிர்க்க வேண்டும். நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு ஊடகம் என்பது அத்தியாவசியமான காரணியாகும்.

கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்ட ஊடகப் பணியாளர்களுக்கான நீதி தொடர்பில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை மாறாக தொடர்ச்சியாக சமூக மட்டத்தில் மக்களுடன் இணைந்து மக்களுக்காகப் பணியாற்றும் ஊடகப் பணியாளர்களை அடக்கியொடுக்கும் வேலையை அரசு தொடர்ந்து செய்கிறது. எனவே. ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நாம் ஒன்றிணைவோம்.

# கல்லறைப் பூக்கள்

17



**பல்துறை எழுத்தாளர்**
**புயல் பெ.ஶ்ரீகந்தநேஷன்**

அவரை வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தும் அவருடைய உயிரைப் பாதுகாக்க முடியவில்லை. கெதியா வா தம்பி வேளைக்குப் போனா 'ஐ.சி.ஆர்.சி' நிக்கும் சூனிய பிரதேசத்தைக் கடக்குறதுக்கு பயமில்லை"

"வீட்டில், மூன்று கிலோ முட்டை மா செய்தது கொண்டு போக, அதை 'பேக்'கில் போட்டு கட்டினனான் 'பேக்' கிழிஞ்சி போச்சி. அதை கட்டிக்கொண்டு வற கொஞ்ச நேரமாச்சு."

"நாட்டில் நடக்கிற எல்லாத்தையும் பார்க்கிறாய்தானே"

"நீங்க சொல்லுறதும் உண்மைதான்"

இருவரும் பயணத்தை ஆரம்பித்தனர். தந்தை கைகளை அசைத்தார். தங்கையின் கண்கள் குளமாகியது. அவர்களின் பாார்வையிலிருந்து இருவரும் மறைந்தனர். கிடங்கும் பள்ளமுமாய் காட்சியளித்த A9 வீதியால், இருவரினது உரையாடலுடன் மோட்டார் சைக்கிள் 40, 50, 60 கதி வேகத்தில் கூடிக்குறைந்து பயணிக்கின்றது.

"அய்யா ஏன் ஒருவரும் 'கெல் மட்' போடாம 'மோட்டர் சைக்கிளிலை போறீனம்?"

"யாழ்ப்பாணத்திலிருந்து ஏக்கம் எப்ப வன்னிக்கு ஓடிவந்துச்சோ?. அப்பயிலிருந்து இஞ்ச யாரும் 'கெல் மட்' போடுறது இல்லை. அப்படி 'கெல் மட்' போட்டா சண்டைக்கு போற ஆக்கள் என்று நினைப்பாங்க?"

"அய்யா அப்ப ஏன் நீங்க கண்ணாடி இல்லாத் கெல் மட்' பொட்டிருக்கீங்க"

"யாரு என்ன சொன்னாலும் எங்கட பாதுகாப்ப நாங்கதானே செய்யனும்? அதோட வயசும் போச்சு. எங்கட இனத்தாலையே பாதி மக்கள் செத்து போச்சி. நாம கண்டறியாத சண்டையால வீண பல வழிகளிலை நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருக்கம்"

"நீங்கள் சொல்லுறதும் சரி. எதிரில் வேகமாக உழவு இயந்திரம் ஒன்று வருது கவனம்"

"இது தம்பி எங்கையும் சண்டை நடந்திருக்கும் எங்கட பொடி பொட்டச்சிகள் காயப்பட்டிருக்குங்கள் இல்லாட்டி வாழ வேண்டிய வயசில் வீட்டில் சண்டைப் போட்டுக்கொண்டு போய் முன் களத்திலருந்து செத்து போயிருக்குங்கள். அது 'டெக்டர்' போகும்." மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்தார். உழவு இயந்திரம் விழுப்புண் அடைந்த ஏக்கக்காரர் பலரையும் வீரச்சாவு அடைந்த பலரையும் பெட்டியில் சுமந்தவாறு மின்னல் சப்தத்தில் தாரா வேகத்தில் அவர்கள் இருவரையும் தாண்டிச் சென்றது. அவர்களின் பயணம் தொடர்கின்றது. கதையும் விட்ட இடத்திலிருந்து தீ பிடிக்கின்றது.

"அய்யா நீங்க கெல் மட்' போட்டருக்கிறதால், உங்களை சண்டைக்கு போற ஆளா நினைக்க மாட்டாங்களா?"

"தம்பி எனக்கு அறுபத்தைந்து வயசாச்சி. இப்பவும் மோட்டர் சைக்கிள் 'அயர்' ஓடித்தான் சாப்படுறன். நினைச்சா நினைச்சுட்டுப் போவட்டும். எல்லாத்துக்கும் ஒரு எல்லை வேணும். இவங்கள் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆக்களை எல்லாம் 'றெஜியினிங்' கொடுத்து 'ஏக்கே' வோட எல்லைப்படைக்கு அனுப்பினாங்களோ அப்பவே எங்கட மக்களில் பல பேர் 'கெல்மட்' போடாம தலையில் வெடிபட்டும், 'பீஸ்' பட்டும் அநியாயமாகச் சாவ தொடங்கிற்றாங்க."

வரலாற்றுப் புராணத்தை இழுத்துக்கொண்டே இயக்கத்தின் சோதனைச் சாவடியைத் தாண்டி சூனியப் பிரதேசத்துக்குள் மோட்டர் சைக்கிளின் முன் சில்லு நெருப்புக்குள் பாய்வது போல மெதுவாக உருண்டு வருகின்றது. வீதியில் இராணுவத்தின் சோதனைச் சாவடியை நோக்கி, வரிசை வரிசையாக முனியப்பர் ஆலயத்திற்கு செல்லும் கிடாக்கள் போல, அங்கு செல்வபர்களின் அனைவரது கண்களிலும் மரணப் பயம் பூத்திருந்தது. மக்கள் சூனிய பிரசேத்தில் பயணிக்கும் போது, கனரக வாகனங்கள் செல்லத் தடை. மக்கள் அனைவரும் தாங்கள் வந்த சிறிய வகை வாகனங்களை வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்தி விட்டு, தாம் கொண்டு வந்த உடைமைகளை ஓர் இடத்தில் வைத்து விட்டு, இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு தேசிய அடையாள அட்டையை வலக்கையில் பிடித்து அசைத்தவாறு இருநூறு மீற்றர் தூரம் நடந்து இராணுவச் சோதனைச் சாவடியை அவைவரும் வந்து சேருவார்கள். 'போக்கி' மூலம் சர்வதேச செஞ்லுவை சங்கத்தினரும் இராணுவத்தினரும் இடைக்கிடையே குடிகரானும் பிச்சைக்காரனும் வாந்தி எடுப்பது போல் உரையாடுவார்கள். அதற்கு இடையில் இயக்கக்காரரும் இடைக்கே புகுந்து கதைப்பாார்கள்.

ஆண்கள் வேறு வரிசையிலும் பெண்கள் வேறு வரிசையிலும் நான்கு பக்கங்களும் இறப்பர் சீட்டுக்களினாலும் சாக்குகளினாலும் மறைத்துக் கட்டப்பட்ட ஒரு கூடாரத்திற்குள் செல்வார்கள். ஒவ்வொருவரையும் கழுத்துப் பகுதியிலிருந்து பாதம் வரை கையுறைகள் அணிந்த கரங்கள் தடவும். எதிரில் கோழிக்குஞ்சைத் தூக்குவதற்கு ஆயத்தமாக நிற்கும் வல்லூறுகள் மாதிரி அடிவருடிகளான தலையாட்டிகள் முகத்தைக் கறுப்பு துணிகளினால், முடியவாறு 'பவல்' வாகனங்களில் தலையாட்டுவதற்கு ஆயத்தமாக நிற்பார்கள் மக்கள் கண்டும் காணாததைப் போல செல்வார்கள். இருந்தும் அப்பாவி மக்கள் சிலருக்கு வல்லுறு பார்வை விழுந்து விடும். பார்வை விழுந்தவார் சில நேரம் உடனே திரும்புவர்" சிலர் சில காலத்தில் திரும்புவர்" சிலர் திரும்பவே மாட்டார்கள். சிலர் காணாமல் போய்விடுவார்கள்' சிலர் பிணமாக வீதியில் கிடப்பார்கள். இவையெல்லாம் வழமை. சாத் கூடாரத்திற்குள் செல்லும் நேரம் வந்து விட்டது. ஆமை வேகதத்தில் வந்தவன் சற்று வேகத்தைக் கூட்டி உள்ளே செல்லுகிறான்

"நம மொக்கத" - உடல் பருத் இராணுவ வீரன், சாத்தின் மேனியை இரு கரங்களினாலும் தடவியவாறு வார்த்தைகசளை வீசினான். சாத்துக்கு வார்த்தைகள் வெளிவருவதற்குச் சிங்கள மொழியில் ஒரு வார்த்தைக் கூட தெரியாது. அன்றுதான் முதற் தடவையாக ஶ்ரீலங்கா இராணுவத்தை நேரில் காணுகின்றான். தடுமாற்றமும் நடுக்கமும் அவனை விட்டு நீங்கவில்லை. மெதுவாக அடையாள அட்டையை நீட்டுகின்றான். அடையாள அட்டையை வாங்கிய இராணுவ வீரன், "சம்பூரண நம கனகர் சாத், கொய்த இந்தலாவ ஆவா?" - விடையும் கேள்வியும் அவனே கேட்டு பதிலும் சொன்னான்.

"எனக்கு சிங்களம் தெரியாது." - சாத் சுத்தத் தமிழில் ஒரு வாக்கியத்தை மெல்ல வீசினான்.

"சரி...சரி... எங்க யிருந்து வாறது"

"மாங்குளத்தில்"

"பிறந்தது யாப்பாணைய பதிஞ்சிய மாங்குளம்"

"ஓ... ஓ... சேர்.."

"நீங்க LTTE சப்போட்டா. அவங்கள பாத்திருக்கீங்களா?"

"இல்லை சேர். றோட்டில் AK யுடன் நிப்பாங்க சேர் அப்ப பாத்திருக்கன்"

"அடோ AK என்று நமயெல்லாம் தெரியுமா உங்களுக்கு?"

"வன்னியில் சின்ன பிள்ளைக்கும் தெரியும் சேர்"

"What?"

"பிள்ளைகளிண்ட விளையாட்டு 'திங்ஸ்'களே இந்த வெடிச்ச ஷெல் துண்டுகளும் உடஞ்சு பழுதாகிய துவக்குகளுந்தான்"

"சரி சரி நீங்க 'கெம்பஸ்ஸுக்குப் படிக்கப் போறதால், உங்கள பதிஞ்சிட்டு விடுகிறன். 'Gun' பெயரெல்லாம் சொல்லுறதாலே கொழும்பில் நாலாம் மாடிக்குப் போக வேண்டி வரும். யாப்பாண போனாலும் ஆமி 'சீயம' அங்க வந்தும் உங்கள விசாரிப்பாங்க கவனம். அப்படியே 'துறுவாக' நடந்து போய் மெத்தன 'சீடிபி பஸ்' தியனவா யண்ட"

"என்ர 'பெக்' சேர்"

" 'பெக்' எல்லாம் 'செக்' பண்ணிட்டு, உங்கட பின் 'பஸ்ஸில்' வரும். ஓடிப் போடா"



பேருந்து, சாத்தின் வருகைக்குக் காத்திருந்தது போல, அவன் ஏறியதும் பின்னால், மக்களின் பொதிகளைச் சுமந்தவாறு புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்ற 'மினிபஸ்' மேல் 'புக்கு புக்கு' என புகையைக் கக்கிப் புறப்பட்டது. புளி மூட்டை போல் அடுக்கப்பட்ட மக்கள் பேருந்தின் உள்ளே புழு மாதிரி நெளிந்தனர். பேருந்தின் முன் வாசல் ஓரம் கம்பியைப் பிடித்தவாறு நின்ற சாத் பேருந்து கண்ணாடிகளின் மூலம் வெளிச் சூழலைப் பார்க்க பார்வையைச் செலுத்தினான். சுற்றி துணியால் அடைக்கப்பட்ட கண்ணாடிகளினூடாக அவனது பார்வை வெளிச் செல்லவில்லை. அந்த துணியை விலத்தி விட்டு பார்ப்பதற்கும் அனுமதி கிடையாது. ஒரு பேருந்தின் இரு வாசல்களிலும் ஆயுதங்களுடன் சீருடையினர் கள்ளர்களைப் பாதுகாப்பது போல் பேருந்தின் உள்ளே இருக்கும் மக்கள் மீது வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

" 'Gun' பெயரெல்லாம் சொல்லுறதாலே கொழும்பில் நாலாம் மாடிக்குப் போக வேண்டி வரும்.' என்ற வசனத்தை யோசிக்கும் போது சாத்தைச் சற்று தயக்கம் கொள்ள வைத்தது. ஊரில் பெரியோர்கள் சொல்ல கேள்விப் பட்டிருக்கான் நாலாம் மாடிக்குப் போனால், ஒன்று சாக வேண்டியதுதான், இல்லாட்டி காணாமப் போக வேண்டியதுதான், இல்லாட்டி ஆயுள் முழுவதும் செயற்படாதவகையில் உடல் ஊனம் உற்று வாழ வேண்டியதுதான், இல்லாவிடில் வெளிய வந்து வேற வருத்தத்தால் சாக வேண்டியதுதான் என்று.

"தம்பி சாத் கவலை படாதை. உனக்கு ஒன்றும் நடக்க, அம்மா விட மாட்டேன்"

"இல்லை, அம்மா எனக்கு பயமாக இருக்கு"

"அப்பு ராசா அம்மாட ஆசையை நிறைவேற்றி வை"

"சும்மா போவம்மா. 'கெம்பஸ்'சுக்குப் போன பிறகு அங்கையும் 'றக்கிங்' தொல்லையும் ஆமிண்ட ஆக்கினையும் தொடரும் போல"

"அதெல்லாம் போகப் போக சரியாகி விடும்"

"இல்லையம்மா... என்னால், முடியாது"

"தம்பி, நாங்க வாழ்க்கை என்ற விளையாட்டுத்திடலில் தொடர்ச்சியாக விளையாடினால்தான், உடலும் உள்ளமும் உறுதி பெறும். இயற்கை எங்களுக்குக் கொடுத்த விபத்து என்ற கூடலினால் இந்த உலகத்தில் அவதரித்தோம். மரணம் என்ற வெற்றியை விளையாட்டு வீரர்களுடன் விளையாடிதான் பெற வேண்டும் அதுதான் உலக நியதி. வாழ்க்கை ஒரு போராட்டம் என்று சில பேர் சொல்லுவாங்க. அது மற்றவர்களைத் துன்புறுத்திக் கொடுமைப் படுத்துபவர்களின் கருத்து. நீ வாழ்வை பகிடியாக எடுக்காமல் விளையாட்டாக எடுத்து விளையாடிப் பார் இடையே விளையாட்டில் வெற்றி தோல்வி வந்தாலும் மரணம் உனக்கு சந்தோஷமான வெற்றியாகவே அமையும்."

"என்ன அம்மா, இன்றைக்குத் தத்துவம் கதைத்துக்கொண்டிருக்க? ஒன்றும் விளங்கவில்லை"

"அட செல்லமே, இது தத்துவம் இல்லடா வாழ்க்கை விளையாட்டில் வெற்றி கொள்வதற்கான வழி முறை."

"நீ, நான் ஆசைப்பட்டமாதிரி வர வேண்டும்"

"கஷ்டம் போல தெரியுது"

"எவ்வளவு பெரிய கனவு கண்டனான்? ஆ...ஆ...ஆ..." - பாக்கியம் அழுது கண்ணீர்த்துளிகள் ஆறாகப் பெருக்கெடுத்து அவனது பாதங்களை கழுவுவதாக உணர்கின்றான்.

"சரி அம்மா, உன்ர ஆசைக்காக மட்டும் இந்த துன்பங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு படிக்கப் போறன்"

"அச்ச மகன்" - பாக்கியம் மகளை முத்த மழையால் நனைக்கின்றாள்.

தொடரும்...

# பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருந்தபோதே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் அவர்கள் தினப்புயலுக்கு வழங்கிய நேர்காணல்



**கேள்வி :- பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் கொடுமைகளைப் போலவே தற்போது சிங்கள மக்களும் இச்சட்டத்தில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலையில் புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கிற இன்னுமொன்றை அரசு கொண்டுவர முனைப்புக்காட்டுகின்றது. இவ்விடயம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் :- அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது ஏற்கனவே அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விட பன்மடங்கு மோசமானது என்பதை நான் பல தடவைகள் கூறியிருக்கிறேன். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தற்போது அமுலில் இருக்கும் சட்டத்தில் ஒரு ஏஎஸ்பிக்கு அல்லது அவருக்கு மேல் உள்ள பொலிஸ் அதிகாரிக்கு கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் ஒரு வழக்கில் ஆதாரமாகப் பயன்படுத்தப்படலாம். அதனால் தான் கடந்த காலங்களில் பலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அது தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சட்டத்தில் இல்லை. ஆனாலும் அதைவிட பல பிரச்சினைக்குரிய விடயங்கள் உள்ளன.

உதாரணமாக: தற்போது இருக்கும் சட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் மட்டும் இந்த தடுப்பாணையை DoDo என்று சொல்வார்கள். அந்த Doவைக் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் தற்போது முன்வைத்துள்ள புதிய எதிர்ப்புச் சட்டத்தில் அந்த தடுப்பாணையை பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் OICயின் வேண்டுதலின் அடிப்படையில் அதைக் கொடுக்கலாம். தற்போது நாட்டில் இருப்பது 50 பிரதி பொலிஸ்மா அதிபர்கள். இந்த 50 நபர்கள் இந்த தடுப்பாணையை Doவைக் கொடுக்கலாம்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு ஊடக சுதந்திரத்தைப் பாதிக்கும் பிரிவுகள் உள்ளன. மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் மனித உரிமைகளைப்பாதிக்கும்பல பிரிவுகள் உள்ளன. உதாரணமாக: இந்த சட்டத்தின் கீழ் இரகசியத் தகவலைச் சேகரித்து ஒருவருக்கு குற்றத்தைப் புரிவதற்குக் கொடுத்தால் அல்லது இந்தத் தகவலைப் பயன்படுத்தி ஒருவர் குற்றம் புரிய முடியும் என்று ஊகித்தால் அது ஒரு குற்றமாகும். இரகசிய தகவல்கள் என்பது என்ன? பொலிசின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் இரகசிய தகவல்கள். ஒரு தடை செய்யப்பட்ட இடத்தைப் பற்றிய தகவல்கள், ஒரு தடுப்பு நிலையத்தில் நடக்கும் செயற்பாடுகள் இரகசிய விடயங்கள். இராணுவத்தை சார்ந்த விடயங்கள், ஒரு தடுப்பு நிலையத்தில் நடக்கும் உரிமை மீறல்கள், சித்திரவதைகள் பற்றி, உதாரணமாக: ஒரு ஊடகவியலாளர் தகவல்களைச் சேகரிக்கிறார். சேகரித்த தகவல்களை மனித உரிமைச் செயற்பாட்டாளருக்குக் கொடுக்கிறார். அந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்குறித்ததகவல்களை முகப்புத்தகத்தில் போடுகின்றார். இவ்வாறான மனித உரிமைச் செயற்பாடுகள் தடுப்பு நிலையத்தில் நடக்கிறது. இதற்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டம் செய்வோம் என்று. இந்தப் புதிய சட்டத்தில் பயங்கரவாதத்தின் வரைவிலக்கணம் பரந்து காணப்படுகின்றது.

அதாவது வரை விலக்கணத்திற்கு இரு பிரிவுகள் உள்ளன. ஒன்று நோக்கம். நீங்கள் என்ன நோக்கத்திற்காக இந்தக் குற்றத்தைப் புரிகிறீர்கள். மற்றையது செயல்கள். அங்கு பட்டியலிட்டிருக்கும் நோக்கத்திற்காக இந்த செயல்களைச் செய்தால் அது பயங்கரவாதமாகும். நோக்கங்கள் என்ன? அரசாங்கத்திற்கு அழுத்தங் கொடுத்தல். ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாதுவிட அழுத்தங் கொடுத்தல் நோக்கம். அந்த நோக்கத்தோடு உதாரணமாக: அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு விளைவித்தால் அது பயங்கரவாதமாகும். உதாரணமாக: சுகாதாரத் துறையை தனியார் மயமாக்க அரசாங்கம் திட்டம்தீட்டினால் அதற்கு எதிராக வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் என பலர் போராடுவார்கள். அது அத்தியாவசியத் சேவைக்கு இடையூறு விளைவிக்கும். அவர்கள் போராடுவதன் நோக்கம் அரசாங்கத்திற்கு அழுத்தங் கொடுத்தலாகும். ஆகவே அந்த செயல் புதிய எதிர்ப்புச் சட்டத்தில் வரைவிலக்கணம் பரந்து காணப்படுவதால், அதை பயங்கரவாதச் செயலாக அவர்கள் பார்த்து போராட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய முடியும்.

அதேபோல சட்டவிரோதமான கூட்டம் அல்லது ஒன்றுகூடல் கூட குற்றமாகலாம். அரசியலமைப்பில் எமது உரிமைகள் என்று கூறப்பட்ட பல விடயங்கள் அவையெல்லாம் குற்றமாக்கப்பட்டிருக்கின்றது. முகப் புத்தகத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் போராடுவோம் என்று கூறினால் அத்தியாவசிய சேவைக்கு ஏதும் இடையூறுகள் விளைவிக்கப்பட்டால் அந்த ஊடகவியலாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் மற்றும் போராடுபவர்கள் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் பயங்கரவாதச் செயற்பாடுகள் என்கிற அடிப்படையில் கைது செய்யப்படலாம்.

**கேள்வி :- ஏற்கனவே உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றவேண்டிய தேவை அரசுக்கு வரக் காரணம் என்ன?**

பதில் :- பல காலமாக இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஐ.நா அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டமானது சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப இல்லை என்பதால், எமது அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளுக்கு ஏற்ப கூட இல்லை.

ஆகவே அந்த அழுத்தம், இலங்கையில் இருந்து பாதிக்கப்பட்ட சமூகம், தமிழர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களால் கூறப்பட்ட விடயம். அது புதிதல்ல. ஆனால் இந்த ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஐரோப்பிய ஒன்றியம் நிபந்தனையாக இதை விதித்தது. அதாவது நீங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கி, சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு ஏற்ப ஒரு சட்டத்தை இயற்றவேண்டும் என்று.

சில நாட்களுக்கு முன் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு அறிக்கையினை விடுத்துள்ளது. அதாவது, இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சட்டமாக்கினால் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையினைப் பெற்றுக்கொள்வதற்கு இடையூறாக இருக்கும் என அரசாங்கத்திற்கு அறிக்கையின் மூலமாக கூறியிருக்கிறது.

**கேள்வி :- இந்தச் சட்டத்தின் மூலம் ஊடகங்களுக்கும்சவாலாகஅமைந்துள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இப்புதிய சட்டத்தை ஆரம்பத்தில் ஜேவிபியின் கலவரங்களின் போதும், வடக்கு கிழக்கில் இருந்த ஆயுதக்குழுக்கள் மீதும் பாவித்தது. பெரும்பான்மையாக தமிழ் மக்களும் இதற்குள் சிக்கினார்கள். தற்போது யுத்தம் மௌனிக்கப்பட்டு 13 வருடங்களைக் கடந்துள்ள சூழலில், இச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவது ஏன்? தற்போது சஹ்ரானின் குண்டுத்தாக்குதல் சம்பவத்தையும் இதற்குள் காரணம் காட்டுகின்றனரே?**

பதில் :- சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை நான் வேறுவிதமாகப் பார்க்கிறேன். பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக மிக முக்கியம். அதனால் தான் எமக்கு தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிகிறது என அரச தரப்பு கூறுகிறது. பிரஜைகளுக்கு பாதுகாப்பைக் கொடுக்கிறோம் என்கிறீர்கள். ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்கிற காலத்தில் தான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. அந்த சட்டத்தைப் பாவித்து குறித்த தாக்குதல் சம்பவத்தை உங்களால் தடுக்க முடியவில்லையே. அதற்குப் பின் நடந்த பல விசாரணைகள், பாராளுமன்ற உப குழுக்கள், ஜனாதிபதி நியமித்த குழு என நடந்த விசாரணைகள், எமக்கு அரச பொறிமுறை, அரச அதிகாரிகளின் கவனயீனத்தால் தான் குறித்த தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த சட்டம் இருந்தும் எமக்குப் பாதுகாப்பினைத் தரவில்லையே என்பதைக் காட்டுகின்றது. ஆக, இதைப்பார்க்கமோசமான இன்னொரு சட்டத்தைக் கொண்டுவந்து எவ்வாறு எமக்கு பாதுகாப்பினைத் தருவது என்று நீங்கள் கூற முடியும்.

**கேள்வி :- அரசியல் காரணங்களுக்காகத் தான் மஹிந்த தரப்பினரால் குறித்த தாக்குதல் சம்பவம் நிகழ்த்தப்பட்டது என கூறுகிறார்கள். மைத்திரி - ரணில் ஆகியோரின் நல்லாட்சி காலத்தில் தான் குறித்த தாக்குதல் நடந்தது. ஏற்கனவே சஹ்ரான் தரப்பு தயார்ப்படுத்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது பின்னர் தெரியவந்தது. அரகல போராட்டத்தினால் அரசு ஆட்டம் கண்டது. இது மாதிரியான தெற்கின் போராட்டங்களுக்காக அரசாங்கம் தற்போது இப்புதிய சட்டமூலத்தைக் கொண்டுவரவேண்டிய தேவையும் இருக்கலாம் தானே?**

பதில் :- அரகல போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல. ஜனாதிபதி இந்த நாட்டின் வரலாற்றில் காணாத பொருளாதார நெருக்கடியினை உருவாக்கியவர். கூறப்பட்ட விடயங்களை கவனத்திற்கொள்ளாது அவற்றை உதாசீனப்படுத்திய ஒரு ஜனாதிபதி. அதற்கு எதிராகவே தெற்கில் போராட்டம் செய்தார்கள். அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை அவர்கள் பயன்படுத்தினார்கள். அதனை பயங்கரவாதம் என்று முத்திரை குத்துவது தவறு. ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக இவ்வாறான வலுவான போராட்டங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கிலும் தான் இப்புதிய சட்ட மூலம் கொண்டுவரப்படுகின்றது.

கடந்த கால அரசாங்கங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் விருப்பமில்லை. அவர்களை எதிர்த்து போராடு பவர்களை விருப்பமில்லை. சிவில் சமூகங்கள் மனித உரிமைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள், அவற்றை ஆவணப்படுத்துகின்றார்கள். வெளிப் படுத்துகின்றார்கள். ஆகையால் தான் ஒவ்வொரு அரசாங்கமும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்துவதற்காக, இவ்வாறான பிற்போக்கான சட்டங்களை கொண்டுவர எத்தணித் திருக்கின்றார்கள்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் : விசாரணைகள் உண்மையைக் கண்டறியவில்லை

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரின்போது கூட கண்டிராத வகையிலான அதிர்ச்சியிலும் பயங்கரத்திலும் முழு நாட்டையும் ஆழ்த்திய 2019 ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களுக்குப்பிறகு பல ஈஸ்டர் ஞாயிறுகள் கடந்துவிட்டன. மூன்று தேவாலயங்களிலும் மூன்று ஆடம்பர ஹோட்டல்களிலும் பத்து தற்கொலை குண்டுதாரிகளினால் ஏககாலத்தில் ஒருங்கிசைவான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 272 பேர் கொல்லப்பட்டதுடன் 500 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். இவர்களில் முழு குடும்பங்களும் பெற்றோருடன் பிள்ளைகளும் இலங்கையின் அன்பையும் நட்பிணக்கத்தையும் அனுபவிக்க வந்த வெளிநாட்டவர்களும் அடங்குவர்.

இரு மாதங்களாக நாடு முடங்கிப்போய்க் கிடந்தது. அப்போது பரவிய வதந்திகளினால் பீதியடைந்த மக்கள் சந்தடிமிக்க பகுதிகளுக்கு வரத் தயங்கினர். உள்நாட்டில் முன்னையமுரண்நிலை வரலாற்றைக் கொண்டிராத ஒரு சிறுபான்மை மதக்குழு இன்னொரு சிறுபான்மை மதக்குழுவுக்கு எதிராக மேற்கொண்ட அந்த குண்டுத் தாக்குதல்களுக்கு எந்தவிதமான தர்க்க நியாயமும் கிடையாது. இந்தத் தாக்குதல்கள் ஒரு தசாப்தத்துக்கு முன்னர் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பிறகு முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்கப் பணிகள் சகலதையும் கெடுத்துவிட்டன.

குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு நிலவிய குழப்பநிலை மற்றும் ஊகங்களுக்கு மத்தியில் முழு நாடும் அச்சத்தில் உறைந்திருந்தது. ஆனால், சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அத்தகைய அச்சவுணர்வை வெளிக்காட்டவில்லை. தாக்கு தல்கள் மேற்கொள்ளப்பட்டு அவலம் நிறைந்ததாக காட்சி தந்த இடங்களுக்கு முதலில் வந்தவர்களில் ஒருவர் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அப்போது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் விருப்பத்தைக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ எதிர்க்கட்சியில் இருந்து அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மிகவும் பொருத்தமான வேட்பாளர் என்று உடனடியாகவே தன்னை அறிவித்ததை காணக்கூடியதாக இருந்தது.

ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்ததைப் போன்று தேசிய பாதுகாப்பை மீண்டும் நிலைநாட்டுவதாக அவர் உறுதியளித்தார். பீதியில் வாழ்ந்துகொண்டிருந்த நாட்டுமக்கள் மத்தியில் அவரது உறுதிமொழி எடுபட்டது. 2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஒரு மிகப்பெரிய பெரும்பான்மை வாக்குகளால்



தெரிவுசெய்தனர்.

ஆனால், அடுத்தடுத்து பதவிக்கு வந்த மூன்று ஜனாதிபதிகளின் கீழான அரசாங்கங்களினால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகள் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்ற உண்மையை வெளிப்படுத்தவில்லை. இது வரையில் அது விடயத்தில் உயர்நீதிமன்றம் மாத்திரமே சிறந்த பணியை செய்திருக்கிறது எனலாம். சட்ட ரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் உகந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் கத்தோலிக்க திருச்சபையும் வேறு குடிமக்களும் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கொன்றை அடுத்தே அது நடந்தது.

விசாரணை அறிக்கைகளை பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நான்கு சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளும்தங்களுக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவல் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் மூலம் பொறுப்பை அலட்சியம் செய்ததாக அவர்களை குற்றவாளிகளாகக் கண்டது. அவர்களுக்கு எதிராக கோடிக்கணக்கான ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால், குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடிய சூத்திரதாரிகளை உயர்நீதிமன்றம் அடையாளம் காணவில்லை. அதனால், உண்மையைக் கண்டறிவதற்கு தேடுதல் தொடருகிறது.

இதுவரையான அரசாங்க விசாரணைகள் திருப்தி யானவையாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியவையாகவும் அமையவில்லை என்று கார்டினல் மல்கம் ரஞ்சித் ஊடக நேர்காணல் ஒன்றில் தெரிவித்தார். "உத்தியோகபூர்வ நீதி வழிமுறைகள் எம்மைப்பொறுத்தவரை நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. ஈஸ்டர் தாக்குதல்கள், அவற்றுக்கான காரணிகள், அதில் பங்கேற்றவர்கள், சூத்திரதாரிகள் மற்றும் ஏனைய சக்திகள் தொடர்பில் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட விசாரணை ஒருபோதும் மேற்கொள்ளப்படவில்லை" என்று அவர் சொன்னார்.

தற்போதைய ஜனாதிபதிக்கு சட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்கு இருப்பதால் அவர் பதவியில் இருந்து விலகியதும் எதிர்காலத்தில் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படும் என்று எச்சரிக்கை செய்தகார்டினல்,ஜனாதிபதிஎல்லாக் காலத்திலும் அந்தப் பதவியில் இருக்கப்போவதில்லை. ஆனால், கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்து இருக்கும். அவருக்குப் பிறகு வருபவர்களும் நடவடிக்கைகளை தொடரவேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

**உண்மை ஆணைக்குழு**

உண்மை வெளிப்படாத பட்சத்தில் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான சர்ச்சைக்கு முடிவு கிடைக்காது. சந்தேகங்கள் மாத்திரமே ஆழமாக தொடரும். கார்டினல் மல்கம் ரஞ்சித் தனது மிகவும் அண்மைய அறிக்கைகளிலும் உரைகளிலும் முன்னரை விடவும் கூடுதலான அளவுக்கு வெளிப்படையாக கருத்துக்களைத் தெரிவித்திருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. "ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்று இப்போது எத்தனை வருடங்கள் கடந்துவிட்டன. நான்கு வருடங்கள். இன்னமும் நீதி கிடைக்கவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியவில்லை. பல விடயங்களை ஆட்கள் பேசுகிறார்கள். நாம் நீதிக்காகவும் உண்மைக்காகவும் போராடவேண்டியது முக்கிய மானதாகும். அது தான் கிறிஸ்தவம்" என்று அவர் கொழும்பில் ஈஸ்டர் நள்ளிரவு ஆராதனையில் கூறினார்.

நீதியைப் பெறுவதில் திருச்சபைக்கு இருக்கும் ஊசலாட்டமில்லாத உறுதிப்பாட்டை வெளிக்காட்டுவதற்கு அப்பால் இது 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகவும் பெருமளவு துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுத்த கொடூரமான ஏற்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும் கூட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களை எவ்வாறு தடுக்கத் தவறியது என்பதற்கு தெளிவான ஒரு உதாரணமாகவும் விளங்குகிறது.

இந்த படிப்பினையை மறந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விடவும் மிகவும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஒன்றை முன்வைத்திருப்பது வேதனைக்குரியதாகும்.

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின்போது நடந்தவற்றை ஆராய்ந்து தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்கு உண்மை ஆணைக்குழுவொன்றை அமைக்கப்போவதாக அரசாங்கம் செய்திருக்கும் அறிவிப்பு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களை கையாளப் போவதில்லை. பதிலாக 1983 ஜூலை 24 தொடக்கம் 2009 மே 18 வரையான காலப்பகுதியையே உத்தேச ஆணைக்குழு ஆராயவிருக்கிறது. விளக்கமாக கூறப்படாவிட்டாலும், இது கெரில்லா போரில் தங்களது போராட்டத்தைத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களினால் முன்னெடுக்கப்பட்ட பிரிவினைவாத கிளர்ச்சிக் காலப்பகுதியேயாகும்.

மோதலின்போது ஆட்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் சேதம் அல்லது தீங்கு தொடர்பில் உண்மையான, துல்லியமான, பக்கச்சார்பற்ற, முழுமை வாய்ந்த பதிவுகளை நிறுவுவதன் மூலம் இலங்கை மக்கள் மத்தியில் தேசிய ஐக்கியம், சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவத்துடனான சகிப்புத்தன்மை, பல்வகைமையை மதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே ஆணைக்குழுவின் ஆணையாக இருக்கும்.

விசாரணைக்கான காலப் பகுதியை 1983 ஜூலை 24 இற்கும் 2009 மே 18 இற்கும் இடைப்பட்டதாக மட்டுப்படுத்துவது ஆணைக்குழுவின் ஆணை மட்டுப்படுத்தப்படுவதன் ஒரு அறிகுறியாகும். ஆனால், போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட பெருமளவு மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. போரின் முடிவுக்குப் பின்னரான நாட்களில் பல பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் காணாமல் போயினர்.

கம்பி வேலிகளினால் சூழப்பட்ட முகாம்களில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான குடிமக்கள் ஆறு மாதங்களுக்கும் கூடுதலான காலமாக அடைத்து வைக்கப்பட்டனர். அவர்களில் பலர் காணாமல் போயினர். சிலர் அதிகாரிகளுக்குப் பணத்தைக் கொடுத்து வெளியே சென்றனர். மற்றவர்கள் பாதுகாப்புப் படைகளினால் அழைத்துச் செல்லப்பட்டனர். **(தொடரும்...)**

**மறவன்**

# ஊடகங்கள் : மாயைகளும், மந்திரங்களும்




பொதுசனங்களின் கூட்டு சிந்தனையை திசைப்படுத்துவதில் ஊடகங்களுக்கு முக்கிய பங்குண்டு. அரசர்களின் காலத்தில் இருந்து நீண்டதூரம் பயணித்து விட்டமையாலும், ஜனநாயகம், சுதந்திரம், சுயநிர்ணயம் போன்ற வாழ்வியல் விழுமியங்கள் அரசியல் நடத்தைகளை ஆக்கிரமித்து நிற்பதாலும், சாதாரணர்களின் சிந்தனையை உருவாக்கும் நிலையை ஊடகங்கள் பெற்றிருக்கின்றன. அதுவும் இந்த நூற்றாண்டில் அடிப்படைத் தேவைகளுக்கு அண்மிய நிலையில் ஊடகங்கள் நிற்கின்றன. வாழ்வின் முழுப் பாகத்தையும் கட்டியாழுகின்றன. அதன் ஒவ்வொரு பாகத்தையும் பலநூறு துண்டங்களாக்கி விளம்பரப்படுத்துகின்றன. விற்பனை செய்கின்றன. ஊடக அரசியல் கலாசாரம் என்று சொல்லப்படுகின்ற ஒருவித போதை அனைத்து தரப்பினரையும் நிர்ணயம் செய்யும் நிலையை உருவாக்கியிருக்கின்றன. உலகம் முழுமையும் இதிலிருந்து விதிவிலக்குப் பெறவில்லை. ஏதாவதொரு வகையில் மேற்கின் அடிமைகளாக உலகத்தவரை வைத்திருக்கும் வேலையை இன்றைய ஊடகங்கள் செய்துவருகின்றன. இதன் உச்சமாக சமூக வலைதளங்கள் மாறியிருக்கின்றன. இந்த இடத்தில்தான் ஈழத்தவர்களாகிய நாம் சில அடிப்படை நுண் அரசியல் விளக்கங்களோடு ஊடகங்கள் நோக்கிய அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு வந்திருக்கிறோம். அது காலத்தின் தேவையாகவும் இருக்கிறது. ஊட்டச்சத்து மிகுந்த நல் சமூக உருவாக்கத்திற்கு விழிப்புணர்வுடன் ஊடகங்களை அணுகுதல் என்ற நிலை அவசியமானது.

போருக்குப் பின்னரான, சிதறும் காலத்தில் வாழுகின்ற ஈழத்தமிழர்களின் எண்ணங்களை சிருஸ்டிப்பு செய்வதிலும் ஊடகங்கள் முக்கிய இடம் பிடித்திருப்பதனை அண்மைய நிலவரங்கள் ஆதாரப்படுத்தி நிற்கின்றன. எங்கும் பார்க்க முடியாத இளையவர்களை சமூக வலைதளங்களில் பார்க்க முடிகிறது. எதற்கும் ஒன்றுதிரளாத ஒரு தலைமுறைதமிழகசினிமாகாரர்களின் ஆதரவு, எதிர் அணிகளில் இணைந்து மோதிக்கொள்ள அணிதிரள்கின்றனர். அதற்கான எதிர்கருத்திடல்களில் தம் வன்மத்தை தீர்த்துக் கொள்கின்றனர். இடையிடையே காதலும், தற்கொலைகளும் வேறு இலங்கையின் சில பகுதிகளில் நடக்கின்றன. சமூக வலைதளங்கள் ஆரோக்கியமான பணிகளுக்கும், அரசியல் முன்னெடுப்புகளுக்கும் பயன்படுத்தக்கூடியவை என்பதை 'அரபு வசந்தம்' என்கிற அரசியல் மாற்றத்துக்கான பேரெழுச்சியை மக்கள் நிரூபித்த பின்னரும், இவ்வாறானதொரு பேதமைத்தனம் நம் தலைமுறையினரிடம் நீடிப்பது நாம் ஒழுக்க பிறழ்வொன்றுக்குள் அகப்பட்டுவிட்டதை வெளிச்ச மிடுகிறது. அரபு வசந்தக்காரர்களும், ஈழத்தமிழர்களும் எதிர்கொள்ளும் அடக்குமுறையின் வடிவங்கள் வேறே தவிர, அதன் இயல்பு ஒன்றாகவே இருக்கிறது. ஆனால், நாம் அடக்குமுறைக்கு எதிரான ஆயுதமாக அதைப் பயன்படுத்த தவறுகிறோம். அரபுக்காரர்கள்தம்மைநோக்கிவீழ்ந்த ஆபத்தையே ஆயுதமாக பயன்படுத்தி வென்றமையை நிகழ்காலம் சொல்லிக் கொண்டிருக்கிறது. நாம் இதிலிருந்தும் விதிவிலக்கானவர்கள்.

இப்போதெல்லாம் இந்திய தொலைக்காட்சிகளுக்கும், அவை நடத்தும் நிகழ்ச்சிகளுக்கும் ஈழத் தமிழர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருக்கிறது. குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகளும், தொடர்களும் ஈழத் தமிழ் வீடுகள் பலவற்றின் இரவை கலவரத்துக்குள்ளாக்குகின்றன. நீயா? நானா என்று போட்டி போட்டுக் கொண்டு விவாதங்களை நடத்தும் தொலைக்காட்சிகள், உண்மையில் நேர்பட பேசுபவையல்ல. அவைகளின் வணிக தரத்தை உயர்த்திக் கொள்ளவும், விளம்பரங்களை அதிகம் பெறுவதற்கான உத்தியாகவுமே இந்த விறுவிறுப்புத்தனத்தை கையாளுகின்றன. அவை சமூகம், சீரழிவு, பண்பாடு என எது குறித்தும், பாதிக்கப்படும் எந்தத் தரப்பினர் குறித்தும் கவலைப்படுவதில்லை. சிவகார்த்திகேயன் போன்ற மசாலாக்காரர்களுக்கு எல்லா இளம் யுவதிகளும் பொதுவெளியில் முத்தமிட துடிக்கும் சமூகமொன்றை உருவாக்கவே முயல்கின்றன. அப்படி ஆசைப்படுவோரின் எண்ணிக்கையும், அவர்களுக்கான மாய உலகமுமே வணிகமயப்பட்ட இந்த ஊடகங்களுக்கும், அவை ஒளிபரப்பும் விளம்பரங்களின் வெற்றிக்கும் அவசியப்படுகின்றன.

இவ்வகை வணிக ஊடகங்கள் சொல்வதெல்லாம் உண்மை என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கெனவே சில நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. விறுவிறுப்பும், நம்பிக்கையும் ஏற்படத்தக்க வகையில் பிரச்சினைகளோடு சம்பந்தப் பட்டவர்களே திரையில் தோன்றி கண்ணீர்விட்டு கதறும் நிலையை பொதுவெளியில் காண்பித்து பணம் சம்பாதிக்கின்றன. உண்மையில் அவ்வாறு பொது வெளியில் தன் பிரச்சினையை போட்டுத் தள்ளுபவன் யாரெனப் பார்த்தால், சேரியிலோ, மின்சாரமே அறிமுகமில்லாத கிராமத்திலோ வாழும் அப்பாவி இந்திய குடிமகனாகத்தான் இருப்பான். நடுத்தர வர்க்கத்தினருடையதோ, உயர்வர்க்கத்தினருடையதோ பிரச்சினைகளை உண்மையாக எந்த ஊடகங்களும் சொல்வதில்லை. அடித்தட்டு மக்கள் இவ்வாறானதொரு கீழ்த்தன்மை ஒழுக்கம் கொண்டவர்கள் என்ற பொதுப்புத்தியை உருவாக்கு வதற்கும், அதை சுவாரஸ்யமாக வழங்கி, தம் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளவே இந்த வகை நிகழ்ச்சிகளை தமிழ் தொலைக்காட்சி ஊடகங்கள் வழங்குகின்றன. ஆனால், அதனையும் ரசிக்க நாள் முழுதும் விவாதித்துக் கொண்டிருக்க நாம் இருக்கிறோம். குறித்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டுவிட்டு, வீடு திரும்புபவரை நோக்கி, சமூகம் வீசும் பார்வையை பற்றி யாரும் அக்கறைப்படுத்துவதில்லை.

சினிமா படங்களை தயாரிப்பவர்கள் வியாபார உத்தியாகவேணும் ஈழம் குறித்த ஒரு பாடலையோ, வசனத்தையோ வைத்துக்கொள்ள விருப்பப்படுகின்றனர். அது வணிகத் தேவைக்கானதே தவிர எம்மை நோக்கிய ஆதரவுக்கானதோ, அக்கறைக்கானதோ அல்ல. ஆனால், அவர்களுக்காகவும் நாம் அணிதிரள்வோம். எது நல்ல ரசனை, எது தரமான சினிமா என்பதை தெரியாமலேயே மட்டமான ஒரு ரசனைக்காக போர்க்கொடி தூக்கும் நிலை உருவாகிவருகிறது.



உண்மையில் நமக்கான ரசனையும், சிந்திப்பும் தனித்துவமானது. அதற்கென அறிவு சார்ந்த மரபே இருந்திருக்கிறது. அதை நூலகங்கள் ஒவ்வொன்றும் சிறைபிடித்து வைத்திருக்கின்றன. ஆனால், அவை இன்று நம்மிடம் இல்லை. சுயத்தன்மைகளை இழந்து, நமக்கான அடையாளத்தை தொலைத்து பிறவற்றை பின்பற்றத் தொடங்குகிறோம் அல்லது கலந்து பயன்படுத்துகிறோம்.

உதாரணமாக, யாழ்ப் பாணத்தின் இன்றைய இளைஞர்கள் அதிகம் பயன்படுத்தும் மொழி வழக்குகளுக்குள் சினிமாத்தனம் இருக்கிறது. அதை சரியெனவே வாதிடும் புத்திசாலித் தலைமுறை யொன்றும் சமூக வலைதளங்களில் இயங்குகின்றது. இன அடையாளமே தேசியத்தின் முதல் பகுதி என்பதை உணராத ஒரு தலைமுறை, அடையாளத்தை மறுதலித்து, அக ஜனநாயகத்துடன் கூடிய தேசியம் குறித்து பேசுகிறது. முன் பின் முரணான இந்தத் தத்துவத்தை சிதைத்து கொண்டிருக்கும் தலைமுறையின் அருகில் விதைத்தவர் அதி பயங்கரமான நச்சுக் கொல்லியாகவே இருப்பர்.

ஈழத்திலிருந்து வருகின்ற குறும்படங்கள் இன்னும் மெய்ச் சத்தக்கவை. உலக குறும்பட போக்கு செக்கன்களளவில் மாறிக் கொண்டிருக்கையில் நாம் நிமிடக் கணக்கில் அதிகரித்துப் போகிறோம். அச்சு அசலான தமிழக படங்களை நகலெடுக்க முனைகிறோம். எமக்கென்று எந்தத் தனித்துவமும் இல்லை. 10நிமிட குறும்படத்தில் 5நிமிட சோடிப் பாடல் இடம்பெற்றுவிடுகிறது. இந்த சினிமா அறிவை எங்கிருந்து பெற்றார்கள் என்று தெரியவில்லை. உலகம், கை நனைப்பதிலிருந்து, கழிவகற்றுவது வரை கல்வி மயப்பட்டு நிற்கையில் இன்னமும் கேள்வி ஞானத்திலேயே அனைத்தையும் சாதித்துவிடலாம் என்று நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம். வசதி வாய்ப்புக்களையும், போரையும் இனியும் காரணம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எதையாவது கற்றுக்கொண்டு நமக்கான புதிய சினிமாவை, அதற்கான தளத்தை உருவாக்க வேண்டும். நாம் முயன்றால் தமிழ் சினிமாவின் அடையாளத்தை நாமே உலகிற்கு கொடுக்க முடியும். நம்மிடமிருக்கும் கதைகள் ஈரானிய சினிமாவை விஞ்சக்கூடியவை. ஆனால், அந்தக் கதைகள் நம் யார் கண்ணிலும் தெரிவதில்லை.

ஆக, கடல் கடந்து வரும் ஊடகங்கள் ஈழ மக்களை இலகுவாக அடிமைப்படுத்தியிருக்கின்றன. முதுகிலேறி வியாபாரம் செய்கின்றன. அதன் மீதோ, சிதைவுறும் காலம் பற்றியோ எவருக்கும் அக்கறையில்லை. அக்கறையிருந்தாலும் அதைக் காட்டிக்கொள்வதில்லை. ஒரு காலப் போக்காகக் கருதி கண்மூடிப் பயணிக்கிறோம். இந்த நிலை அபத்தங்களையும், தொடர் தோல்விகளையும் அளித்துக் கொண்டேயிருக்கும்.

**ஜெரா**

# எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான ஜனநாயக உரிமையை பேணிப்பாதுகாத்தல்




பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைவை அரசாங்கம் தற்காலிகமாக மாத்திரமே திரும்பப் பெற்றிருக்கிறது. அந்த வரைவுக்கு திருத்தங்களைச் செய்வதற்கு யோசனைகளை முன்வைப்பதற்கு மேலும் கால அவகாசத்தை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக நிதியமைச்சர் கூறியிருக்கிறார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் உயர் மதத்தலைவர்கள் உட்பட சமூகத்தின் பரந்துபட்ட பிரிவினரிடமிருந்து வரைவுக்கு எதிர்ப்பு கிளம்பியது. பெருவாரியான அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஜனநாயக ரீதியானவை என்றும் நியாயபூர்வமானவை என்றும் உலகம் பூராவும் அங்கீகரிக்கப்படுகின்ற மக்கள் போராட்டங்களை அரசாங்கம் ஒடுக்குவதற்கு வகைசெய்யக்கூடியதாக விசாலமான அம்சங்களை வரைவு கொண்டிருப்பதே இந்தக் கடும் எதிர்ப்புக்கான காரணமாகும்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க முன்னெடுக்கப்படவேண்டியிருக்கும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் நடுத்தர வர்க்கம் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தவருக்கு இடர்பாடுகளைக் கொடுக்கும்போது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் அதிகரிக்கவே செய்யும். மக்கள் போராட்டங்களினால் தோன்றக்கூடிய நெருக்கடி நிலவரத்தை கையாள அரசாங்கம் அதன் படைக்கல களஞ்சியத்தை தயார் செய்கிறது போன்று தெரிகிறது. அதில் பிரதானமான ஆயுதங்களில் ஒன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமாகும்.

அரசாங்கங்கள் அவற்றின் அதிகாரத்தையும் நிலைகளையும் பாதுகாப்பதற்குச் சட்டத்தை பயன்படுத்துவதில் அல்லது சட்டத்தை மீறுவதில் நாட்டம் காட்டுவது என்பது இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியேகமானது அல்ல. இஸ்ரேல், பாகிஸ்தான் போன்று இலங்கையில் இருந்து கலாசார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபட்டவையாகஇருக்கும்ஏனைய நடுகளிலும் இதை காணக்கூடியதாக இருக்கிறது. அவை அந்தப் போக்கின் வளர்ச்சியில் வேறுபட்ட கட்டங்களில் இருக்கின்றன. இஸ்ரேல் அதில் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதைப் பொறுத்தவரை, மக்கள் பெருமளவுக்கு நேரடியான பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கிறது போல தோன்றுகிறது. தங்களது நல்வாழ்வு மீது அக்கறை காட்டப்படாமல் இருப்பதாக அல்லது நல்வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் உணருகின்ற கொந்தளிப்பான சூழ்நிலைகளில் தாங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு, கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பாதுகாக்க அவர்கள் அமைதி வழியில் வீதியில் இறங்குகிறார்கள்.

பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. பணவீக்கம் 45 சதவீதத்தையும் தாண்டிவிட்டது. வருடாந்தம் பத்து இலட்சத்துக்கும் அதிகமான பாகிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். “ஆழமான அரசியல் துருவமய வேறுபாடுகள் மற்றும் நாடாளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான இழுபறி காரணமாக உள்நாட்டு யுத்தம் ஒன்று மூழக்கூடிய ஆபத்து இருக்கிறது. இது பெரும் கவலை தருகிறது. பஞ்சாப்பில் மே 14 மாகாண சட்டசபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தவறினால் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று முன்னாள் பிரதமர் இம்ரான் கான் விடுத்திருந்த எச்சரிக்கை நாட்டில் நிலவரங்கள் நன்றாக இல்லை என்பதை காட்டுகிறது” என்று பேராசிரியர் மூனிஸ் அஹ்மர் எழுதியிருக்கிறார். இலங்கையைப் போன்றே பாகிஸ்தானிலும் தேர்தல்களை நடத்துவதற்கு பணம் இல்லை என்று அந்நாட்டு அரசாங்கம் கூறுகிறது.

“பாகிஸ்தானின் வரலாற்றில் முதற்தடவையாக தேசிய மட்டத்தில் நெறிமுறையும் பண்புகளும் பார தூரமான அளவுக்கு சீரழிவுக்கு உள்ளாகி யிருக்கின்றன. அரச நிறுவனங்களின் சீர்குலைவில் இது பிரதிபலிக்கிறது. பிரதம நீதியரசரினதும் ஏனைய நீதிபதிகளினதும் உத்தரவுகளை மதித்து நடக்க பிரதமர் தவறுகிறார் என்றால், தேர்தல் ஆணைக்குழு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு இணங்க செயற்படாமல் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறுகிறது என்றால் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு நிலவரம் சென்றுவிட்டது என்பதே அர்த்தமாகும்.

“நாடாளுமன்றம் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு மதிப்பளிக்காதபோது, பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு முரணான தங்களது நிலைப்பாடுகள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படாதபோது நாட்டின் உயர்வாழ்வு நிச்சயம் ஆபத்துக்குள்ளாகிறது” என்றும் பேராசிரியர் அஹ்மர் கூறுகிறார். இது இலங்கையினதும் பாகிஸ்தானினதும் நிலவரங்களில் உள்ள சமாந்தரங்களை மேலும் உணர்த்தி நிற்கிறது.

இஸ்ரேல் போராட்டங்கள்

இஸ்ரேலில் இடம்பெறுகின்ற மக்கள் போராட்டங்கள் எனக்கு “அரகலயவை” நினைவுபடுத்துகின்றன. அமெரிக்க யூத கமிட்டியின் அழைப்பின் பேரில் கடந்த மாதம் அந்த நாட்டுக்கு நான் விஜயம்செய்தேன். நான்தங்கியிருந்த ஹோட்டலுக்கு வெளியே இளம் பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களதும் பேராசிரியர்களும் அன்றையதினம் நடக்கவிருந்த போராட்டத்தில் பங்குபற்றுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்களை வீதியில் போவோர் வருவோரிடம் விநியோகித்துக்கொண்டிருந்தனர்.

இஸ்ரேல் அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி அதற்கு அனுகூலமான முறையில் சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு வசீகரமும் அனுபவமும் உடைய ஒரு தலைவர். ஆனால், அவர் இப்போது நாட்டு மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் கடைப்பிடிக்கும் ஒருவராக மாறியிருக்கிறார்.

நீதிமன்றங்களில் அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அதனால் அவர் நீதிமன்றங்கள் தன்னை குற்றவாளியாகக் காணக்கூடியதாக அமைந்திருக்கும் சட்டங்களை மாற்றியமைப்பதற்கு நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தியிருக்கிறார். நீதிபதிகளை நியமிப்பதற்கு தற்போது கடைப்பிடிக்கப்படும் சுயாதீனமான செயன்முறைக்கு பதிலாக அந்த நியமனங்களை செய்யும் அதிகாரங்களை அரசாங்கத்துக்கு வழங்கக்கூடியதாக சட்டத்தை மாற்றுவதற்கும் அவர் முயற்சிக்கிறார்.

நீதித்துறை சீர்திருத்த திட்டம் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வழக்கு விசாரணையை எதிர்நோக்கும் நெதான்யாகுவுக்கும் இஸ்ரேலின் வரலாற்றில் மிகவும் கடும்போக்கான கூட்டணியாக அமைந்திருக்கும் அவரின் அரசாங்கத்தின் பங்காளிகளுக்கும் நீதிபதிகளை நியமிப்பதில் இறுதி அதிகாரத்தைக் கொடுக்கும். அந்தத் திட்டம் நெதான்யாகுவின் நேசக்கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நாடாளுமன்றத்துக்கு நீதிமன்றங்களின் தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கும் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு இருக்கும் ஆற்றலை மட்டுப்படுத்துவதற்கும் அதிகாரத்தைக் கொடுக்கும். இது இலங்கையின் கடந்த வருடத்தைய நிகழ்வுப்போக்குகளை நினைவுபடுத்துவதாக அமைகிறது. உத்தேச மாற்றங்களை வர்த்தக தலைவர்கள் உட்பட இஸ்ரேலிய சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கிர்கள்.

இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்படுமானால் கடமைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்று இஸ்ரேலிய றிசேர்வ் படைகள் அச்சுறுத்தியிருக்கின்றன. அரசாங்க நிறுவனங்களின் அதிகாரங்களை ஒழுங்கமைக்கும் ‘தடுப்புக்கள் மற்றும் சமப்படுத்தல்கள்’ ஏற்பாடுகள் போன்ற ஜனநாயகக் கோட்பாடுகளைப் பற்றி அக்கறைப்படாத ஒரு அரசாங்கத்துக்காக தாங்கள் சண்டையிடுவதற்கு விரும்பவில்லை என்று அந்தப் படைகள் கூறியிருக்கின்றன. அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் பெரும்பாலும் மதசார்பற்ற, மத்தியதர வர்க்க இஸ்ரேலியர்கள் கிரமமாக ஆர்ப்பாட்டங்களில் இணைந்திருக்கிறார்கள்.

கடந்த வருடம் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்த அரசாங்கத்துக்கு எதிராக இலங்கை மக்கள் வீதிகளில் இறங்கிசெய்த கிளர்ச்சியைப்போன்று கடந்த பதினெட்டு வாரங்களாக இஸ்ரேலில் போராட்டங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. இது தங்களது அரசாங்கத்துக்கு எதிராக போராடுவதற்கு வீதிகளில் இறங்க முடியும் என்று மக்கள் உணரும் ஜனநாயகத்தின் ஒரு அறிகுறியாகும். இலங்கையில் நடந்ததைப் போன்று இஸ்ரேலிய நகரங்களால் மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு போராட்டங்களை நடத்துகிறார்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...

**கலாநிதி ஜெகான் பெரேரா**

# பிராந்திய செய்திகள்



## ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் விசேட அறிவிப்பு




2022 ஆம் ஆண்டு தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 31/12/2021 அன்று பணியை முடித்து, ஆசிரியர் இடமாறுதல் கடிதம் பெற்ற அனைத்து ஆசிரியர்களும் ஜூன் 12 ஆம் திகதிக்குள் பணியிடத்துக்குச் சமூகமளிக்க வேண்டும்.

ஒரு ஆசிரியர் மேல்முறையீடு செய்ய விரும்பினால், தலைமையாசிரியர் பணிக்கு அறிக்கை செய்த பிறகு ஆசிரியர் இடமாறுதல் துறைக்கு மேல்முறையீடு செய்யலாம் என்றும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் ஆசிரியர் இடமாறுதல் திணைக்களத்திற்கு நேரில் சென்று பார்வையிட வேண்டிய அவசியமில்லை எனவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மீதான மேன்முறையீட்டுத் தீர்மானம் உடனடியாக அறிவிக்கப்படும் எனவும் உரிய அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியமனத்தில் யூனானி வைத்தியர்கள் புறக்கணிப்பு





வைத்திய நியமனத்தில் யூனானி வைத்தியர்களாகிய தாங்கள் புறக்கணிப்பட்டுள்ளதாக தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டமானது யூனானி வைத்தியர்கள் ஒன்று கூடி மஹரகம நாவின்ன பகுதியில் அமைந்துள்ள ஆயுள்வேத திணைக்களத்தின் முன்னெடுத்தனர்.

இப்போராட்டத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும் போது ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களை உள்ளடக்கி நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது எனவும் ஆனால் தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டினர். மேலும் 100 க்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் தற்போது வழங்குவதானது யூனானி வைத்தியர்களாகிய எமக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனங்களின் போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யூனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், அன்றையதினம் வழங்கப்பட இருக்கின்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில் யூனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமையானது சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதுடன் இது யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தான் கருதுவதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டினர்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில் யூனானி வைத்தியர்களாகிய தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்துமாறும் பாதிக்கப்பட்டுள்ள யூனானி வைத்தியர்கள் கொரிக்கைகளை முன்வைத்து பல்வேறு சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

இது தவிர மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர்களையும் இணைத்துக்கொள்வதற்கு தேவையான பணிப்புரையினை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் யூனானி வைத்தியர்களாகிய எமக்கு தற்போது இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதி தொடர்பில் உரிய தரப்பினர் தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். - பாறுக் ஷிஹான்

## இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த முடிவு

300 முதல் 400 வரையிலான இறக்குமதி பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

குறித்த இறக்குமதி கட்டுப்பாடுகளை அடுத்த வாரம் முதல் தளர்த்த நடவடிக்கை எடுப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

## சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் எரிபொருள் விநியோகம்

இந்த வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் எரிபொருள் விநியோகத்தை தொடருமாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய சேமிப்பு முனையத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர டுவிட்டரில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலதிக நேரச் செலவுகளைக் குறைக்கும் நோக்கில், கடந்த 4 மாதங்களில் அரசாங்க விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

## வரி அறவிடப்படுதல் தொடர்பான அறிவிப்பு




18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வரிக் கோப்பு ஒன்றைத் திறப்பதன் ஊடாக அவர்களிடம் இருந்து வரி அறவிடப்படும் என்ற அர்த்தம் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த வரிக் கோப்பு இலக்கத்தின் கீழ் எதிர்கால நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2023 வரவு செலவு திட்டத்தில் நம் நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து குடிமக்களுக்கும் வரிக் கோப்பு திறக்கப்படும் என்று ஒரு முன்மொழிவு இருந்தது.

இதன் பொருள் அரசாங்கம் இவர்கள் அனைவரிடமிருந்தும் வரிப் பணத்தை வசூலிக்கப் போகிறது என்று அர்த்தமல்ல என அவர் தெரிவித்துள்ளது.

அரசவருமானத்திற்கு சில கட்டுப்பாடுகளை கொண்டுவருவதற்காகவே எல்லோரையும் பதிவு செய்வதாக அவர் தெரிவித்துள்ளார். சிலருக்கு பதிவு செய்து அந்த கோப்பில் உள்ள தகவலின் படி அரசாங்கம் கொடுக்கும் உதவிகள் அவருக்கு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையர்களுக்கு இத்தாலியில் வழங்கப்பட்டுள்ள சலுகை



இத்தாலியில் பணிபுரியும் இலங்கையர்கள், இலங்கையில் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை அந்த நாட்டில் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தாலியில் வாழும் மற்றும் பணியாற்றும் லட்சக்கணக்கான இலங்கையர்களுக்கு நடைமுறைப் பிரச்சினையாக உள்ள சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு இந்த அனுமதியை வழங்குவதற்கு இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் ரீட்டா மனெல்லா இணங்கியுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது
நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, இத்தாலியில் வாழும் இலங்கையர்களின் இந்த கோரிக்கையை இத்தாலிய தூதுவருக்கு முன்வைத்திருந்த நிலையில், அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்தாலிய தூதுவருக்கும் நீதி அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பொன்று நீதியமைச்சில் இடம்பெற்றதுடன், இலங்கையில் வசிக்கும் இத்தாலியர்கள் இத்தாலிய செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியை வழங்குமாறு அமைச்சரிடம் தூதுவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பரஸ்பர நட்புறவை கருத்திற்கொண்டு வெளிவிவகார அமைச்சு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் கலந்துரையாடி இந்த கோரிக்கையை விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக நீதியமைச்சர் இத்தாலிய தூதுவருக்கு அறிவித்துள்ளார்.

# யாழ் நூலக எரிப்பு : உண்மைகளும் மாயைகளும் நினைவுக் குறிப்புகள்

கடந்த முதலாம் திகதி யாழ் நூலக எரிப்பு நினைவு கூரப்பட்டது. எதிரியை எங்கே தாக்கினால் நிலை குலையச் செய்யலாமோ அந்த இடத்தில் தாக்குவதுதான் பொதுவான இயல்பு. இன்னும் கூர்மையாக சொன்னால் எதிர்த்தரப்பின் உயிர்நிலை எதுவோ அங்கே தாக்குவது. ஈழத் தமிழர்களின் உயிர் நிலை அல்லது குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்களின் உயிர் நிலை கல்விதான் என்று கருதிய காரணத்தினாலேயே யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தவர்களின் உயிர்நிலை கல்விதானா என்ற கேள்விக்கு உரிய விடையைத் தனியாக ஆராய வேண்டும். ஆனால் சிங்கள அரசியல்வாதிகள் அப்படித்தான் நம்பினார்கள். அதனால்தான் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் கூறின் அது ஒரு பண்பாட்டு ரீதியிலான இனப்படுகொலை எனலாம். இது முதலாவது.

இரண்டாவது. நூலகத்தை எரிப்பதற்குரிய அரசியல் பின்னணி. தமிழ் மக்களுக்கு ஒரு சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் ஒரு பொருத்தமான தருணத்துக்காக காத்திருந்தார்கள். வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய தமிழ் தலைவர்களுக்கும் அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும் மறக்க முடியாத ஒரு பாடத்தைக் கற்பிப்பது அவர்களின் நோக்கம். ஏற்கனவே 1977இல் நிகழ்ந்த இன வன்முறையின் போது தமிழர்களுக்கு கொடுத்த அடி போதாது என்று தென்னிலங்கையிலிருந்த இனவாத சக்திகள் சிந்தித்தன. அதைவிட நோகக்கூடிய ஒரு அடி அதுவும் இதயத்தில் அல்லது உயிர் நிலையில் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு தருணத்துக்காக காத்திருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு தருணத்தை மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் களம் திறந்துவிட்டது. இது இரண்டாவது உண்மை.

மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் களம் எனப்படுவது தமிழ் தலைவர்களின் குத்துக்கரணத்தின் விளைவு. 1976இல் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு மக்கள் ஆணையைப் பெற்ற தமிழ் தலைவர்கள் 1981இல் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு கீழிறங்கி வந்தார்கள். ஏன் அப்படிச் சறுக்கினீர்கள் என்று கேட்டபோது அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சொன்னார் "மாவட்ட அபிவிருத்தி சபை ஒரு தங்குமடம்" என்று.

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு மக்களிடம் ஆணையைப் பெற்ற தலைவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபை என்ற தங்குமிடத்தை ஏற்கத் தயாரானார்கள். இதை அவர்கள் 1979 இலேயே தொடக்கி விட்டார்கள். மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்குவதற்கான தென்னகோன் ஆணைகுழுவிலிருந்து இது தொடங்கியது. இது ஒருவிதத்தில் மக்கள் அவர்களுக்கு வழங்கிய ஆணையைக் காட்டிக்கொடுத்தமை தான். இவ்வாறு தமிழ்த் தலைவர்கள் நசியத் தொடங்கியதை அப்போதிருந்த ஆயுதப் போராட்ட இயக்கங்கள் பெரும்பாலானவை எதிர்த்தன. அந்த எதிர்ப்பை அவர்கள் வெவ்வேறு வடிவங்களில் வெளிக் காட்டினார்கள். "தங்குமடம் வேண்டாம் விடுதலையே வேண்டும்" என்று இறைகுமாரன் உமைகுமாரன் உள்ளிட்ட மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் குரல் எழுப்பினார்கள். பொதுவாக ஆயுதமேந்திய அமைப்புகள் தேர்தலை குழப்புவதற்கு ஒன்றில் வாக்குச்சாவடிகளை தாக்குவதுண்டு. அல்லது வேட்பாளர்களை தாக்குவதுண்டு. அல்லது பிரச்சாரக் கூட்டங்களை குழப்புவதுண்டு. அதைத்தான் தமிழ் இயக்கங்களும் செய்தன. புளொட் இயக்கம் யு.என்.பி வேட்பாளர் தியாகராஜாவை சுட்டுக் கொன்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் நாச்சிமார் கோவிலடியில் நடந்த ஒரு கூட்டத்தில் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரண்டு பேரை கொன்றது. இவை தவிர யாழ் பல்கலைக்கழகத்தில் அப்போதைய எதிர்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்தின் காவலரின் துப்பாக்கியை பல்கலைக்கழக மாணவர்கள் பறித்தார்கள்.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் தான் நூலக எரிப்பு இடம்பெற்றது. இச் சம்பவங்களை ஒரு சாட்டாக வைத்து ஓர் உணர்ச்சிகரமான பழிவாங்கற் சூழலை உருவாக்கி நூலகம் எரிக்கப்பட்டது. பூபாலசிங்கம் புத்தகசாலை எரிக்கப்பட்டது. அதோடு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகை காரியாலயம் எரிக்கப்பட்டது. எனவே நூலகம் எரிக்கப்படுவததற்கான அரசியல் சூழல் என்று எடுத்துப் பார்த்தால் அதில் தமிழ்த் தலைவர்களின் நேர்மையின்மைக்கும் ஒரு பங்கு உண்டு. மக்களிடம் எந்த வாக்குறுதிகளை முன்வைத்து ஆணையை பெற்றார்களோ அந்த மக்கள் ஆணையை மீறி மாவட்ட அபிவிருத்தி சபை என்ற அற்பமான ஒரு தீர்வுக்கு அப்போதிருந்த தமிழ் தலைவர்கள் இழிந்து சென்றார்கள். எனவே நூலக எரிப்பை நினைவு கூரும்போது தமிழ் தலைவர்களின் அயோக்கியத்தனத்தையும் நினைவு கூரவேண்டும். இது மூன்றாவது உண்மை.

நூலக எரிப்பு அரசாங்கத்தின் அனுசரணையோடு தான் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு சான்றாதாரங்கள் கிடைத்தன. அரச தரப்பைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக பிரேமதாஸ போன்றவர்கள் பின்னாளில் ஒப்புதல் வாக்குமூலங்களை வழங்கினர். எனினும் அக்காலகட்டத்தில் அதற்காக எந்த ஒரு சிங்களத் தலைவரும் மன்னிப்பு கேட்கத் தயாராக இருக்கவில்லை. சில தசாப்தங்களின் பின் ரணில் விக்ரமசிங்க 2016ஆம் ஆண்டு அதற்காக மன்னிப்பு கேட்டார். மாமன் செய்த செயலுக்கு மருமகன் 35 ஆண்டுகள் கழித்து மன்னிப்புக் கேட்டார். மாமன் அதைச் செய்தபொழுது மருமகனும் மாமனின் அரசாங்கத்தில் ஒரு பங்காளியாக இருந்தார். எனினும் 35 ஆண்டுகளின் பின்னாவது ஒரு சிங்களத் தலைவர் மன்னிப்பு கேட்டது உற்று கவனிக்கப்பட வேண்டியது. ஆனால் இங்கு மன்னிப்பு மட்டும் பரிகாரம் அல்ல. குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்த ஐநா தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறுகால நீதி எனப்படுவது முழுக்க முழுக்க பொறுப்புக்கூறல் தான். பொறுப்புக்கூறல் என்பது நடந்த செயல்களுக்கு மன்னிப்பு கேட்பது மட்டுமல்ல அதற்கும் அப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அந்த மக்கள் தங்களுக்கு நீதி வழங்கப்பட்டதாக நம்பவும் வேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க இதுவிடயத்தில் முதலாவது அடியை மட்டும்தான் எடுத்து வைத்தார். இது நாலாவது உண்மை.

ஐந்தாவது உண்மை அல்லது மாயை. எரிக்கப்பட்ட காரணத்தால் அந்த நூலகத்தை பற்றிய பிம்பம் அதன் அளவை மீறி பெரிதாக்கப்பட்டது. குறிப்பாக ஒரு கிறிஸ்தவ மதகுரு நூலகம் எரிக்கப்பட்ட அதிர்ச்சியில் உயிர்நீத்தமை அந்த பிம்பத்தை மேலும் உணர்வுபூர்வமாகப் பெரிதாக்க உதவியது. அதனால் அந்த நூலகம் தென்னாசியாவின் மிகப்பெரிய நூலகம் என்று ஒரு தகவல் பரப்பப்படுகிறது. அது உண்மையல்ல. அதைவிடப் பெரிய நூலகங்கள் தென்னாசியாவில் உண்டு. எனவே தென்னாசியாவின் மிகப்பெரிய நூலகம் என்பது ஒரு மாயை.

ஆறாவது உண்மை. அந்த நூலகத்தில் மிக அரிதான ஏட்டுச் சுவடிகளும் சில மூல நூல்களும் பேணப்பட்டன. அரிதான



இந்த மூல ஆவணங்கள் காரணமாகவே அந்த நூலகத்துக்கு ஒரு தனி இடமும் முக்கியத்துவமும் உண்டு. இதுதான் உண்மை. அந்த மூல ஆவணங்களையும் மூலச் சுவடிகளையும் மீளப் பெற முடியவில்லை என்பதுதான் அதில் உள்ள இழப்பின் கனம்.

ஏழாவது உண்மை. அந்த நூலகம் மட்டும் எரிக்கப்படவில்லை அதன் நினைவுகளும் நீக்கப்பட்டன. எரிந்த கட்டடத்தை ஒரு நினைவுச் சின்னமாக ' உயிருள்ள மியூசியமாகப் பேண வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக புலமையாளர் சிலர் குரல் கொடுத்தனர். ஆனால் அந்தக் காயத்தை வெள்ளையடித்து மினுக்கி மறைத்து விட்டார்கள். அது ஒரு நினைவழிப்பு. வரலாற்றழிப்பு.

எட்டாவது- அந்த நூலகத்தை எரித்ததின் மூலம் தமிழ் மக்களின் அறிவின் மீதான தாகத்தையும் அல்லது அறிவின் மீதான அடங்கா பசியை எரித்தழிப்பதையே எதிரிகள் நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது. ஆனால் தமிழ்ச் சமூகத்தில் காணப்பட்ட சாதி ஏற்றத் தாழ்வுகள் காரணமாக ஏற்கனவே சமூகத்தின் ஒரு பகுதியினரின் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக் காட்டும் ஒரு விமர்சனம் முகநூலில் வைக்கப்படுகிறது. அது உண்மை.

தமது சமூகத்திற்கு உள்ளேயே ஒரு தரப்பினரின் கல்வி கற்கும் உரிமையை மறுத்தவர்கள் தம்மைவிடப் பெரிய இனம் இனரீதியாக தமது கல்வி உரிமையை மறுக்கும் போது அதை எதிர்த்து போராடும் தகுதியை இழக்கிறார்கள் என்பது சரியான ஒரு வாதம் தான். ஆனால் தமது சமூகத்தில் சாதி ஏற்றத்தாழ்வு காரணமாக ஒரு பகுதியினரின் கல்வி உரிமையை மறுத்தவர்கள் தங்களைத் தமிழ் தேசியவாதிகளாக கூறிக்கொள்ள முடியாது. சாதி ஏற்றத் தாழ்வுகளையும் சமய ஏற்றத் தாழ்வுகளையும் பிரதேச ஏற்றத் தாழ்வுகளையும் பால் ஏற்றத் தாழ்வுகளையும் இவை போன்ற ஏனைய சமூக அசமத்துவங்களையும் ஏற்றுக்கொள்ளும் எவரும் தேசியவாதியாக இருக்க முடியாது. எனவே ஒரு தமிழ்த் தேசியவாதி சாதியின் பேரால் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியை நிராகரிக்க முடியாது. அவ்வாறு நிராகரிப்பவர் தேசியவாதியல்ல. அவர்கள் தேசிய விரோதிகள்தான். எனவே தேசியவாதிகள் அல்லாதவர்களின் சமூக ஒடுக்கு முறைக்காக இன ஒடுக்குமுறையை நியாயப்படுத்த முடியாது.

ஒன்பதாவது - உண்மையல்ல மாயை. தமிழ் மக்களின் இதயம் நூல்களில் இருக்கிறது என்று கருதித்தான் தென்னிலங்கையில் இருப்பவர்கள் யாழ் நூலகத்தை எரித்தார்கள் என்று எடுத்துக் கொண்டால் தமிழ் மக்கள் அறிவிற் சிறந்தவர்கள் என்றும் எல்லாவற்றையும் அறிவின் வெளிச்சம் கொண்டு பார்ப்பவர்கள் என்றும் அறிவை வழிபடுகிறவர்கள் என்றும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான அரசியல் அதை நிரூபிக்கிறதா?

தமிழில் புலமையாளர்களாகக் காணப்பட்ட பலரும் தமிழ் இயக்கங்களிடம் இருந்து விலகி நின்றார்கள். தமிழ் இயக்கங்களில் ஓர்கானிக் இன்ரலெக்சுவல்களாக நின்றவர்கள் மிகக் குறைவு. இதனாலேயே இயக்கங்கள் படித்தவர்களை பயந்தவர்கள் கதைகாரர் என்றெல்லாம் கணித்து வைத்திருந்தன. இப்பொழுதும் தமிழில் அறிவும் அரசியலும் ஒன்று சேர்ந்து பயணிப்பதாக கூறமுடியாது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலான ஆயுதப் போராட்டத்திலும் சரி அதற்கு முன்னும் பின்னுமான மிதவாத அரசியலிலும் சரி அறிவாராய்ச்சி மையங்களை காணமுடியவில்லை. சிந்தனைக் குழாம்களையும் காணமுடியவில்லை. தமிழ் மக்கள் அறிவைப் போற்றுகிறவர்கள் என்று கூறுவது சரியா?

இப்பொழுதும் திருத்தப்பட்ட நூலகத்துக்கு போனால் ஒரு பயங்கரமான உண்மையை கண்டுபிடிக்கலாம். அங்கே அறிவைத் தேடி வாசிக்க வருபவர்களின் தொகை மிகக் குறைவு. மாறாக பாடவிதானத்தோடு தொடர்புடைய விடயங்களை அமைதியான சூழலில் படிக்கச் வருபவர்களே அங்கு அதிகம். அதாவது அமைதியான சூழலில் பரீட்சைக்குப் பாடப் புத்தகங்களைப் படிக்கச் வருபவர்கள். தவிர நகரப்பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கும் பிள்ளைகள் பாட இடைவேளைகளில் படிக்க வருவதுண்டு. ஆனால் அறிவாராய்ச்சி துறைக்காக உசாத்துணை தேவைகளுக்காக அந்த நூலகத்தை பயன்படுத்துவோரின் தொகை ஒப்பீட்டளவில் குறைவு என்றே கருதப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஒரு தொகுதி நூல்களையும் உபகரணங்களையும் நூலகத்திற்கு வழங்கியது. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவோரின் தொகை மிகக் குறைவே என்று நூலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதுதான் நிலைமை. அறிவியல் தேவைகளுக்காகவும் ஆராய்ச்சி தேவைகளுக்காகவும் நூலகத்தை பயன்படுத்துவோரை விடவும் பரீட்சை தேவைகளுக்காக நூலகத்தை பயன்படுத்துவோர் தொகை தான் அதிகமாக இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த லட்சணத்தில் தமிழ் மக்களின் உயிர் நிலை அறிவு என்றும் தமிழ் மக்களின் இதயம் நூல்களில் இருக்கிறது என்றும் பொய் சொல்லிக்கொண்டு இருக்கிறோமா?

**நிலாந்தன்**

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



**சுழியோடி**

**21**

தமிழ் மக்களை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்திய நிகழ்வாக விடுதலைப்புலிகளின் சிறப்பு தளபதியான பிரிக்கேடியர் பால்ராஜ் அவர்களின் வீரச்சாவு நிகழ்வு அன்று வன்னியில் நிகழ்ந்தது. உண்மையில் போராளிகள் தமிழ் மக்களின் மனங்களில் மட்டுமல்ல சிங்கள படைகளினதும் படைத் தளபதிகளினதும் ஆட்சியாளர்களினதும் மனங்களில் எல்லாம் நிறைந்து இருந்தவர் தளபதி பால்ராஜ். அதாவது எதிரிக்கு எதிரியாகவும்மக்களுக்குமக்களாகவும் போராளிகளுக்கு போராளியாகவும் பொறுப்பாளர்களுக்கு தளபதியாகவும் அண்ணனுக்கு தம்பியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வலது கரமாகவும் திகழ்ந்தவர் எங்கள் பால்ராஜ் அண்ணா.

எல்லோராலும் செல்லமாக லீமா என்று அழைக்கப்படும் பால்ராஜ் அண்ணாவின் இழப்பு செய்தி (20-05-2007) அன்று அலம்பில் பகுதியில் நடந்தேறுகிறது. பால்ராஜ் அண்ணாவின் விடுதலை போராட்ட வரலாறு சொல்ல முடியாது, எழுத முடியாது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. தமிழீழ விடுதலையின் முதுகெலும்பாக திகழ்ந்தவர் தமிழர்களின் வரலாற்றில் முதல் மரபுவழிபடையணியாகதிகழ்வதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி. விடுதலை போராட்டத்தின் தொடக்க காலத்தில் போராட்டம் பல்வேறு நெருக்கடி நெருக்குவாரங்களை சந்தித்த போதெல்லாம் அதில் இருந்து விடுபட வழி எடுத்து கொடுத்தவரும் தமிழீழ தேசிய தலைவரின் தோழருமான சாள்ஸ் அன்ரனி அவர்களின் நினைவை தாங்கி தொடங்கப்பட்டதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி.

இந்த படையணியின் வரலாறு தமிழீழ மண் எங்கிலும் உண்டு. சாள்ஸ் அன்ரனி படையணி களத்தில் என்றால் அதற்கு ஒரு பெருமை, காரணம் களம், வெற்றி களமாக மாறும் என்பதுதான். (1983) யூலை (15) நாள் என்னை சுட்டுபோட்டு துப்பாக்கியை எடுத்துகொண்டு போ என்று கட்டளை இட்ட வீரன்தான் லெப்.சீலன் என்று அழைக்கப்படும் சாள்ஸ் அன்ரனி. அவரது நாமம் தரித்து (01-04-1994) அன்று உருவாக்கம் பெற்ற படையணியாக சாள்ஸ் அன்ரனி திகழ்கிறது.

இந்தியாவின் (9) பயிற்சி பாசறையில் பயிற்சி பெற்ற பால்ராஜ் அவர்களின் விடுதலை போராட்ட தொடக்க காலமே போர்கலை வல்லவன் பசிலனுடன் தான் ஆரம்பிக்கிறது. முன்னைய வன்னி மாவட்ட தளபதி மேஜர் பசிலனின் வலது கரமாக திகழ்ந்தவர் லீமா அவர்கள், பசிலனின் கரத்திற்கு வலுச்சேர்க்கும் கரமாக அன்று திகழ்ந்தார். பசிலனின் தாக்குதல் என்று இருந்தாலும் அல்லது பசிலனின் உணவிலிருந்து என்றாலும் அதில் லீமாவின் பங்கு இருக்கும். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முதல் தளபதியாகவும் விடுதலைப்புலிகளின் படைப்பிரிவின் துணைத்தளபதியாகவும் விளங்கியவர் லீமா. களத்தில் தொலைத்தொடர்பு கருவிகளில் லீமாவின் கனீர் என்ற குரல் கேட்டால் போராளிகள் மத்தியில் உத்வேகம் பிறந்துவிடும். அதேவேளை சிங்கள படைக்கு அது பயப்பீதியை கொடுக்கும். களமுனைகளில் சண்டைகள் என்றால் லீமாவின் குரல்கள் தொலைத்தொடர்பில் ஓங்கி ஒலிக்கும். தனது கட்டளைகளால் ஏராளமான எதிரியின் படை முகாம்களை தகர்த்து படைத் தளபாடங்களை அள்ளிவந்த சாதனைக்கு சொந்தக்காரர். விடுதலைப்புலிகளின் பலத்தை அதிகரிக்க பெருமளவு வெடிபொருட்கள், படைய பொருட்கள் தேவைப்பட்டன. தனிமனிதனாக செயல்பட்ட லீமா அவர்கள் பல்வேறு தாக்குதல்களில் விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்தினை அதிகரிக்க செய்தார்.


துணிவு, தந்திரம், வேகம் இம் மூன்றின் உருவம்தான் பால்ராஜ் அவர்கள். எதிரி களம் திறப்பதற்கு முன்னர், எதிரிக்கும் களம் திறப்பதில் வல்லவர். புதிய புதிய திட்டங்கள் போர் நுட்பங்களுடன் போராளிகளை வழிநடத்துவதில் வல்லவர் எங்கள் அண்ணன் லீமா. இப்படிப்பட்ட லீமாதான் அன்று சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் தளபதியாக எதிரிக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார். களமுனையில் எதிரியுடன் நேரடியாக சண்டையிட்டு உடலெங்கும் பல விழுப்புண்களை வாங்கிகொண்டு களமுனைகளில் வீறுநடை போடுவார் எங்கள் லீமா. விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் என்றும் நிகழ்ந்திராத சாதனையை நிகழ்த்திய வரலாற்று தாக்குதலாக ஓயாத அலைகள் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இதில் ஓயாத அலைகள் மூன்றில் இத்தாவில் தரை இறக்கத்திற்காக அனைத்து படையணிகளின் பகுதிகளுடனும் லீமா கடல் மார்க்கமாக இத்தாவில் பகுதியில் தரையிறங்கி (34) நாட்கள் தொடர் தாக்குதலினை தொடுக்கிறார். லீமா எங்களுடன் நிற்கிறார் என்ற உறுதியுடன் போராளிகள் களமுனையில் தாக்குதலை தொடுக்கிறார்கள். இவ்வாறுதான் தீச்சுவாலை முறியடிப்பு சமர் என்றாலும்அதிலும்லீமாமுழுமையாக தனது படையணிகளுடன் களமிறங்கி எதிரிக்கு தகுந்த பாடம் புகட்டினார் அன்று. இதன் பின்புதான் சமாதானம் என்ற மாயை உருப்பெறுகிறது.

இதிலும் லீமா தன் உடலினை பொருட்படுத்தாமல் பயிற்சி திட்டங்களில் ஈடுபடுகிறார். ஏன் அவரது உடல்நோயினை சீர்செய்ய பன்னாடு ஒன்றிற்கு லீமா அனுப்பப்படுகின்றார். இதன்போது ஒரு அதிசயம் நிகழ்கின்றது. மருத்துவத்தினை முடித்து சிறிலங்காவின் கட்டுநாயக்க விமான நிலையம் வந்து இறங்குகின்றார் லீமா. அப்போது சிறிலங்கா படையின் தளபதிகள் எல்லோரும் பால்ராஜ் அவர்களை ஓர் அதிசயம் போல பார்க்கிறார்கள். அப்போது மட்டும்தான் எதிரியால் லீமாவை நேரடியாக பார்க்க முடிந்தது. அந்த அளவிற்கு எதிரிக்கு கலக்கம் கொடுக்கும் வல்லவனாக திகழ்ந்தவர் லீமா அவர்கள்.

சிகிச்சை பெற்று திரும்பிய பின் சமாதான காலத்திலும் அவர் சும்மா இருக்கவில்லை. தமிழீழ தேசிய தலைவர் அவர்களின் கட்டளைக்கு அமைவாக கிழக்கு மாகாணம் செல்கிறார். அங்கு படையணிகளை பயிற்சியில் ஈடுபடுத்துகிறார்.

அடிப்படை பயிற்சி தொடக்கம் மோட்டார் படை அணிவரை லீமாவின் நெறிப்படுத்தலில் நடைபெறுகிறது. இதன்போது தான் (2004) வாகரையில் ஆழிப் பேரலையிலும் லீமா அவர்களும் பாதிக்கப்படுகிறார். எனினும் அதிலிருந்து மீண்டவர் பின்பு வன்னியில் படை கட்டுமானங்களின் மீள் பயிற்சி தொடக்கம் அதிகாரிகளின் பயிற்சி திட்டங்களில் முனைப்புடன் செயற்பட்டு பல மேல்நிலை அதிகாரிகளை உருவாக்குகின்றார்.

இங்கு படை அணிகளில் உள்ள லெப்.கேணல் நிலையுடைய கட்டளை அதிகாரிகளுக்கு படை தந்திரோபாயங்கள், யுத்திகள் என்பன லீமா அவர்களால் நேரடியாக பயிற்றப்படுகின்றது. கனரக ஆயுதம் இயக்குதல் டாங்கி இயக்குதல், டாங்கிக்கு எதிர்தாக்குதல் செய்தல் போன்ற கனரக ஆயுதங்களை எல்லாம் அவர் திறம்பட கற்று வைத்துள்ளார் என்பது அப்போதுதான் அந்த மேல்நிலை அதிகாரிகள் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு கூட தெரிய வருகிறது. லீமா அவர்களால் உருவாக்கப்பட்ட போர் வீரர்கள் எத்தனையோ பேர்கள் களத்தில் சாதனைகளை படைத்து இருக்கிறார்கள். பயிற்சி தளங்களில் பயிற்சிகளை வழங்கிக்கொண்டு இருந்த நிலையில்தான் லீமா அவர்களுக்கு களமுனை ஒன்றை சீர்படுத்தவேண்டிய உத்தரவு வருகின்றது. அது மன்னார் களமுனை. குறுகிய காலத்துக்குள் மன்னார் களமுனையினை சீர்செய்துவிட்டார். அப்போதுதான் லீமா அவர்களின் உடல்நிலை சற்று மோசமடைகிறது. இதனால் ஓய்விற்காக விடப்படுகிறார், ஆனால் அவர் ஓய்வெடுக்கவில்லை. போராளிகளுக்கு வகுப்பெடுக்கிறார். அங்கும்லீமா அவர்களின்திறமையான நுட்பங்கள் பயிற்றப்படுகின்றது.



போர் உச்சமாகிக் கொண்டிருந்த நிலையில், தமிழீழ துணைப்படை கட்டுமானத்தினை லீமா அவர்கள் மேற்கொள்கிறார். விடுதலை போராட்டத்திற்கு ஆட்பலம் சேர்க்கும் பணிகளில் அவர் தன் உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் நேரடியாக களம் இறங்குகின்றார். கிராமங்களில் வீட்டுடன் நிற்கும் முன்னாள் போராளிகளை ஒன்றுதிரட்டி அமைப்பில் இணையுமாறு கதைக்கிறார். இதில் போராளிகள் பலர் இணைகிறார்கள். இணைந்த வர்களின் குடும்ப பராமரிப்பு செலவுகள் தொடர்ச்சியாக லீமா அவர்களினால் கவனிக்கப்படுகின்றது. வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டுவித்து கொடுக்கிறார். இவ்வாறு இயலுமான உதவிகளை மேற்கொண்டு போராட்டத்துக்குள் முன்னைய போராளிகளை புதிய வடிவத்தில் இணைக்கும் பணிகளில் மக்களிடம் சென்று நேரடியாக கதைக்கின்றார். இவ்வாறு இருக்கையில் தான் அன்று அலம்பில் பகுதியில் இவரது சோகமான செய்தி வந்து சேர்கின்றது.

தொடரும்...

# இராணுவ துணைக்குழுக்களால் கிழக்கில் வைத்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களின் 19 ஆண்டு நினைவு அஞ்சலி

கடந்த 31-05-2023 அன்று வவுனியா ஊடக மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மறைந்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில், ஊடக அமைய தலைவர், செயலாளர் உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டதுடன், நினைவுரையினை தினப்புயல் ஊடகப் பனிப்பாளர் சக்கிவேற்பிள்ளை பிரகாஸ் வழங்கியிருந்தார்.

ஊடகவியலாளர் நடேசனை கொலை செய்தவர்கள் கருணா குழுவை சேர்ந்தவர்கள் என பலருக்கும் தெரிந்தாலும் நேரடியாக கொலையில் ஈடுபட்டவர்கள் யார் என்ற விபரம் பெரிய அளவில் வெளிவரவில்லை.

மட்டக்களப்பு எல்லை வீதியில் வைத்து ஊடகவியலாளர் நடேசனை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே சுட்டுக்கொன்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது வீட்டிலிருந்து 31.05.2004 அன்று அலுவலகம் நோக்கி பணிக்காக சென்றுகொண்டிருந்த வேளை சிறிலங்கா அரச படைகளின் ஆயுத தாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட “நாட்டுப்பற்றாளர்” ஊடகவியலாளர் நடேசன் (ஐயாத்துரை நடேசன்) அவர்களின் 19ம் ஆண்டு நினைவு வணக்கநாள்.

2004ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் நாள் மட்டக்களப்பில் தனது வீட்டில் இருந்து காலை பணிக்குச் சென்றுகொண்டிருந்தபோது இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் படுகொலை செய்யப்பட்டபோது அகவை 50 ஆகும்.

யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து வளர்ந்த ஐ.நடேசன் மட்டக்களப்பில் பல ஆண்டுகள் வாழ்ந்ததுடன், தென் தமிழீழ மக்கள் மீதும், அந்த மண் மீதும் அளப்பரிய பற்றுக்கொண்டிருந்தார்.

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் முழு நேரமாகப் பணியாற்றாது விட்டாலும், ஒரு முழுநேர ஊடகவியலாளன் ஆற்றும் பணிக்கு ஈடாக, அல்லது அதற்கு மேலாகவும் தனது ஊடப்பணியை செவ்வனே ஆற்றி வந்தவர்.

இவரது பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டமை, அவரது ஊடகப் பணிக்கு கிடைத்த சான்றுகளாகும். இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர்கூட தனது தலைசிறந்த ஊடகப்பணிக்காக மதிப்பளிக்கப்பட்டவர்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், ‘நெல்லை நடேசன்’ என்ற பெயரில் பத்தி எழுத்தாளராகவும் இருந்த இவர், 1997ஆம் ஆண்டு முதல் லண்டனை தளமாகக் கொண்டியங்கிய ஐ.பி.சி வானொலி, கொழும்பு சக்தி தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊடகங்களுக்கு தனது இறுதி மூச்சுவரை பணியாற்றியவர்.

மட்டக்களப்பு மக்கள் மட்டுமன்றி, இன அழிப்பை அதிகம் எதிர்கொண்ட தமிழீழ மக்கள் மீதான இனப்படுகொலைகள் பற்றிய விபரங்களை விரல் நுனியில் வைத்திருந்த இவர், அந்த மக்கள் நினைவுகூரப்பட வேண்டும் என்பதிலும், அந்தப் படுகொலை பற்றிய விபரங்களை ஏனையவர்கள், குறிப்பாக இளையோர் அறிந்திருக்க வேண்டும் என்பதிலும் கரிசனை கொண்டிருந்தவர்.









07ஆம் பக்கத் தொடர்ச்சி...

நாடாளுமன்றத்தில் பெரும் பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் நெதன்யாகு அரசாங்கத்துக்கு தங்களது ஜனநாயகத்தை மலினப்படுத்தக்கூடியது என்று போராட்டக்காரர்கள் நம்பும் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறது. பெரும் பான்மையின் தீர்மானங்களுக்கு எதிராகவும் கூட எதிர்ப்பை வெளிக்காட்டிப் போராடுவதற்கான உரிமை மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தினால் பாதுகாக்கப்படும் ஒரு அடிப்படை மனித உரிமையாகும். இந்தப் பிரகடனத்தில் பாகிஸ்தான், இஸ்ரேல், இலங்கை கைச்சாத்திட்டிருக்கின்றன.
இதுவரையில் இஸ்ரேலிய அரசாங்கம் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் உரிமையை மீறவில்லை.

சர்வதேச நெருக்குதல்

எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமைகளையும் கூட குற்றச்செயலாக்கி பயங்கர வாதத்துக்கு விசாலமான வியாக்கியானத்தைக் கொடுப்பதே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் உள்ள பிரதான பிரச்சினையாகும். தொழிற்சங்க நடவடிக்கை உள்ளடங்கலாக மக்கள் போராட்டங்கள் அரசாங்கத்தினதும் பொருளாதாரத்தினதும் உறுதிப் பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைவதாகக் கூறி அவற்றை பயங்கரவாதத்துக்கு சம மானவையாக்கி ஒடுக்குவதற்கான மேலதிக அதிகாரங்களை சட்டமூல வரைவு அரசாங்கத்துக்கு வழங்குகிறது. கடந்த வருடம் அரகலயவை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த நிலைப்பாடு இதுவே.

‘முறைமை மாற்றம்’ ஒன்றையும் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்ததற்கு பொறுப்பான சகல தலைவர்களும் பதவி விலகவேண்டும் என்றும் கோரிநின்ற போராட்டக்காரர்களைக் கைது செய்வதற்கு (பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பதிலீடு செய்ய உத்தேசிக்கின்ற) பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

ஆனால், இந்த வருடமும் நெருக்கடி தொடரும் என்றும் அது அடுத்த வருடமும் தொடர்ந்து அதற்கு அப்பாலும் செல்லும் என்றும் உலக வங்கி மிகவும் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி வறுமையை 13.1 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக்கி இரட்டிப்பாக்கியிருக்கிறது.
குடும்பங்களின் வாழ் வாதாரங்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு இடர்பாடுகளின் விளைவாக அடுத்த சில வருடங்களுக்கு வறுமை 25 சதவீதத்துக்கு மேலாக நீடிக்கும் என்று உலக வங்கி கூறுகிறது. வறுமைக் குறைப்பிலும் மனித மூலதன அபிவிருத்தியிலும் பல வருடங்களாக அடையப்பெற்ற பயன்களை பொருளாதார நெருக்கடி மறுதலையாக்கியிருக்கிறது.
நெருக்கடி மேலும் சுமார் 25 இலட்சம் மக்களை வறியவர்களின் அணியில் சேர்த்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்வரும் மாதங்களில் மக்கள் போராட்டங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் இடம்பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இதை எதிர்கொள்வதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசாங்கம் தயார் செய்கிறது. சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் மதத்தலைவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாதுகாப்புப் படைகளையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் பயன்படுத்தி அரகலயவை ஒரு சில நாட்களுக்குள் நிர்மூலம் செய்த அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைவை மறுசீரமைப்பதற்கு முன்வைக்கப் பட்டிருக்கும் யோசனைகளை கருத்தில் எடுப்பது சாத்தியமில்லை.

அக்கறை கொண்ட தரப்பினர் சட்டமூலத்துக்கு திருத்த யோசனைகளை மே 31 வரை சமர்ப்பிக்கலாம் என்று நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச அழைத்திருக்கின்ற போதிலும் சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்ற உள்நாட்டு தரப்புகளின் யோசனைகளை அரசாங்கம் அக்கறைகாட்டி செயற்படும் என்பது சாத்தியமில்லை.

மக்களின் எதிர்ப்பு அரசாங்கத்தை பெரும்நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கும் இஸ்ரேலின் ஜனநாயக சமுதாயத்தைப் போலன்றி இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் பொருளாதார சலுகையை இழக்கக்கூடிய ஆபத்து போன்ற சர்வதேச நெருக்குதல்களே அரசாங்கத்தை வழிக்குக்கொண்டுவர உதவமுடியும்.



# “ரணில் ஒரு நரி. அவரின் நரிப்போக்கை காட்டத்தான் செய்வார் - சிங்களவருக்கு பாகுபாடு செய்ய முடியாது”

## ஓய்வுபெற்ற நீதியரசரும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தினப்புயலுக்கு வழங்கிய நேர்காணல்

கடந்தவாரத் தொடர்ச்சி...

ஆனால் அந்த பௌத்த கோவில் சிங்களவர்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல. பௌத்த தமிழர்களின் புராதன காலத்தில் இது இருந்தது. அதனை மேலும் கொண்டுவருவதற்கும் அந்த இடத்தில் தற்போது புதிதாக ஒரு பௌத்த விகாரையை அமைப்பதற்கு. இருக்கின்ற இந்து ஆலயங்களை அழிப்பதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுக்கின்றார்கள்.

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெற்கில் நீங்கள் இந்துக் கோவில்களை அமைப்பதற்கு நாங்கள் இடமளிப்போம் என்று கூறியதாக ஒரு பத்திரிகைச் செய்தியில் பார்த்தேன். தெற்கில் இடமளிப்போம் என்பது ஒரு பிழையான செயல். அதாவது நாங்களும் ஒரு பிழையான செயலைச் செய்கிறோம். நீங்களும் அங்கு ஒரு பிழையான செயலைச் செய்யுங்கள் என்பது போல அவரது கூற்று இருக்கிறது. ஆனால் நாங்கள் தெற்கில் சென்று எந்தக் கோவிலையும் அமைக்க முடியாது. சண்டைதான் ஏற்படும். இதில் இராணுவம் இருப்பதால் தான் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது. மக்கள் திணறுகின்றார்கள். இராணுவம் இல்லாவிடில் இங்கு கொண்டுவந்து கோவில் அமைக்கும் முன்பு அடித்து விரட்டிவிடுவார்கள்.

இதில் கவனிக்கவேண்டிய விடயம் சிங்கள ஆதிக்கத்தைப் பெருக்குவதற்காக வலியுறுத்துவதற்காக தமிழ் மக்கள் இருந்த இடங்களில் எங்கெங்கு தமிழ் மக்கள் ஆண்டார்களோ அங்கெல்லாம் இருந்த தமிழ் பௌத்த சின்னங்களை இன்று சிங்கள பௌத்த சின்னங்களாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இன்று சிங்கள ஏகாதிபத்தியதை இதன் மூலம் நிலைநிறுத்தப் பார்க்கின்றார்கள். இவை சம்பந்தமாக பல வழிகளில் நாங்கள் நடவடிக்கைகள் எடுக்கலாம். மக்கள் இப்போது அங்கு சென்று கிளர்ந்தெழுந்து சில நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். நீதிமன்றத்துக்குச் செல்கின்றார்கள். அது ஒரு விதம். இவர்களுக்கு உண்மையான எங்களுடைய சரித்திர அறிவைப் புகட்டி அதன் ஊடாக நாம் நன்மையைப் பெறுவதும் பிறநாட்டுக்கும் இந்த அறிவைத் தெரியப்படுத்தி இவர்கள் இங்கு செய்ய விளைவது என்ன நடவடிக்கை என்பதை எடுத்துக்காட்டி அதுவும் ஒரு முக்கியமான போராட்டம் தான். அந்த நடவடிக்கையில் நாங்கள் இப்போது ஈடுபட்டிருக்கின்றோம். எங்களுடைய கருத்துக்களுக்கு அமையத்தான் ஜனாதிபதி ஒரு சரித்திரபூர்வமான குழுவை அமைக்கப்போவதாகக் கூறியிருக்கின்றார். ஏப்ரல் 30ம் திகதி காலைக்கதிர் ஆசிரியர் தலையங்கத்திலே இதுகுறித்து முழுமையாக எழுதியிருக்கின்றார்கள்.

கேள்வி :- இந்தியாவினது RSS. சிவசேனை போன்ற அமைப்புக்களினால் வடகிழக்கில் மதக்கலவரத்தை உருவாக்குகிறார்கள் என்று கிறிஸ்தவ அமைப்பொன்று அறிவித்திருக்கிறது. அண்மையில் சிவசேனை அமைப்பினால் பாதிரியார் ஒருவர் கூட திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். உண்மையில் நற்செய்தியினைக் கூற வரும் கிறிஸ்தவ பாதிரியார்கள் இங்கு வந்து மதக்கலவரத்தை அல்லது மதமாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள் என்கிற போர்வையில் சித்தரிக்கப்படுவதன் நோக்கம் தான் என்ன?

பதில் :- மதம் வேறு. அரசியல் வேறு. அரசியல் மதத்தை தமது நன்மைகளுக்காக கொண்டுவந்தால் தான் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும். மதப் பிரச்சாரங்களை அவர் அவர் அவர்களுடைய மதம் சார்பாக மேற்கொண்டால் யாருக்கும் பிரச்சினை இல்லை. ஆனால் இன்று அதற்குள்ளும் அரசியல் வருகின்றபோது தான் அரசியலோடு மதம் சேர்ந்தால் தான் இந்தவிதமான பிரச்சினைகள் ஏற்படும். என்னென்ன நடந்தது யார் சரி பிழை என்பதற்கப்பால் வடமாகாணத்திலே தற்போது ஒரு பதற்றநிலையை ஏற்படுத்தக்கூடிய சூழல் எழுந்துள்ளது. அது அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதோ அல்லது வேறு சக்திகளால் அது நடைமுறைப்படுத்தப்படுகிறதோ என சரியாகத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் முக்கியமாகக் கவனித்து நடவடிக்கைகளில் இறங்கவேண்டும்.

ஒரு இந்துவை கிறிஸ்தவர் அடித்துவிட்டார் என்பதற்காக எல்லா இந்துக்களும் இணைந்து கிறிஸ்தவர்களை சென்று அடிப்பது தவறான விடயம். எதற்காக?. எங்கு? என்ன நடந்தது?. அதனுடைய காரணம் என்ன என்பதை நாங்கள் அறிய வேண்டும் என்பதுதான் எங்களுடைய முக்கியமான தொழில். அதனைவிடுத்து உணர்ச்சிவசப்பட்டு பலவிதங்களில் ஈடுபடுவது தவறான செயல். சரி தவறு பார்ப்பதற்கு அப்பால் மக்கள் இதன் அடிப்படை என்ன? யாரிடமிருந்து வருகிறது? எதற்காக இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என போதியளவு ஆராய்ந்து அறிவது தான் முக்கியமானதொரு செயலாக நான் கருதுகிறேன்.

கேள்வி :- இன்று தையிட்டி பிரச்சினை பூதாகரமாக வெடித்துள்ளது. பௌத்த விகாரை அங்கு கோபுரம் வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசில் தான் அடிக்கல் நாட்டப்பட்டதாகவும். இதில் தற்போது தமிழ்க் கட்சிகள், மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக?

பதில் :- அங்கு இதுவரை காலமும் விகாரைக்கு இடம் கொடுத்தவர்கள் இன்று வேறுவிதமாக சிந்திக்கத் தொடங்கியிருப்பதன் அர்த்தத்தையும் நாங்கள் பார்க்கவேண்டும். ஏதாவது ஒரு மதஸ்தலத்தை நிர்மாணிப்பது என்றால் அதற்குரிய சட்டங்கள் இருக்கின்றன. அந்த சட்டத்திற்கு அமைவாக இது அமைக்கப்பட்டதா என்பதுதான் இங்கு முக்கியமான கேள்வி. அதை நாங்கள் முதலில் பார்க்கவேண்டும். பௌத்தர்கள் கொண்டு வந்தார்களா. சிங்களவர்கள் கொண்டு வந்தார்களா. சீனர்கள் கொண்டுவந்தார்களா என்பதல்ல. சட்டரீதியான நிர்மாணிப்பா இல்லையா என்று. அதனை நாங்கள் பார்த்து அறிந்துகொண்ட பின்பு தான் நாம் பிற நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். இவ் விகாரை கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அங்கிருந்த உள்ளூராட்சி சபைகள் ஏன் இதுபற்றி கேள்விகள் கேட்கவில்லை. உயர்பாதுகாப்பு வலயமாக இருந்தாலும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியிருக்க முடியும். ஒன்றுமே செய்யாமல் இருந்துவிட்டு இப்பொழுது ஏதோவொரு அரசியல் காரணத்திற்காக நாங்கள் இதையெல்லாம் செய்கின்றோம். அதற்காக அவர்கள் கட்டியது சரியென்று நான் கூறவில்லை. ஆனால் கட்டவிட்டுவிட்டு இப்பொழுது அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்போது அதனது தாக்கம் இன்னும் கூடியதாக அமையும் என்பது தான் மனவருத்தத்தைத் தருகின்றது. இதில் உடனடியாக செய்யவேண்டியது சட்ட ரீதியாக என்ன அடிப்படையில் அது கட்டப்பட்டது. அவ்வாறு கட்டப்படுவது சட்டத்திற்குப் புறம்பானதா சட்டத்திற்கு உள்ளானதா என்பது தொடர்பில் அறிந்துகொண்டுதான் அது தொடர்பான நடவடிக்கைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கவேண்டும்.

கேள்வி :- இலங்கையினது தேர்தலைப் பொறுத்தவரை ஏற்கனவே மாகாண சபைகள் செயலிழந்துபோயுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலுக்கானத் தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் தொடர்பில் ராஜதந்திர ரீதியாக காய்களை நகர்த்திச் செல்வது தெரிகிறது. பாராளுமன்றத்தில் தனது பலத்தினைத் தக்கவைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்துச் செய்றபடுகிறார் என்கிற கருத்துக்கள் கூறப்படுகின்றது. பாராளுமன்றக் கலைப்பு என்கிற விடயங்களும் பேசப்படுகின்றது. ஜனாதிபதியின் இராஜதந்திர நடவடிக்கைகள் தமிழ் மக்களது விடயத்தில் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும்?

பதில் :- இதை நாங்கள் தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் என்று பார்க்கக்கூடாது. நாட்டினது பொருளாதார நிலைமையை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு வருடத்திற்கு முதல் இருந்த நாட்டினது பொருளாதார நிலைமை இன்று இல்லை. எவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டினை பொறுப்பெடுத்தார் என்பதை விட்டுவிட்டு. இதுவரை காலமும் நாடு இருந்த பொருளாதார மற்றும் பதற்ற நிலையில் இருந்து விடுபட்டு அமைதியான சூழலுக்கு வந்திருக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் பார்ப்பீர்களேயானால். இந்த ஜனநாயக முறைப்படி செய்யவேண்டிய நடவடிக்கைகள், அது சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், அது சம்பந்தமாக நாங்கள் பேசவேண்டிய அவசியம் தற்போது கிடையாது என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் நாட்டினுடைய பொருளாதார நிலை மிக மோசமானதொரு நிலைக்கு வந்திருக்கும் போது இந்தியாவிலிருந்து இவ்வளவு பெரிய தொகை உதவியினை நாங்கள் பெற்றிருக்கும்போது மற்றைய நாடுகளிடமிருந்தும் நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கும்போதுநாங்கள் எங்களுடைய நிறுவனங்கள் சம்பந்தமாக, வடமாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபைகள், பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை கொஞ்சம் தள்ளிப்போடவேண்டிய அவசியம் இருக்கின்றது.

ஏனென்றால் அவர் நல்லதொரு வேலையைச் செய்துகொண்டிருக்கும் போது அதற்குப் பாதகமாக அவரை வெளியே தள்ளினால் அந்த இடத்திற்கு யாரை நியமிக்கப்போகிறார்கள். யார் வரப்போகிறார்கள். இப்பொழுது இருக்கும் நிலைக்கு மாறானதொரு நிலையைத் தான் அது ஏற்படுத்தப்போகிறது. பாராளுமன்றத்தில் இருக்கும் எவரையாவது நீங்கள் சுட்டிக் காட்டுங்கள் அவரால் தற்போதிருக்கும் ஜனாதிபதிக்கு திறமையான முறையில் இந்த நடவடிக்கைகளை எடுத்துச்செல்ல முடியுமா என்பதைக் கவனித்தீர்களேயானால் அப்போது புரியும்.

நீங்கள் கூறியதுபோன்று ரணிலின் தனிப்போக்கு மற்றும் எதுவாகவிருந்தாலும் தற்போது அவை நடைபெறுவதற்கான காரணங்கள் பல இருக்கின்றன. ஆனால் பொருளாதார ரீதியாக இந்த நாடு சென்றிருக்கும் நிலையை ஒரு அளவுக்கு கட்டுப்படுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை இவர் எடுத்திருக்கின்றபடியால் தற்போது இது சம்பந்தமான சிந்தனைகளில் ஈடுபடாமல் அடுத்த வருடம் தேர்தல் சம்பந்தமான சிந்தனைகளில் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது என்னுடைய கருத்து.

கேள்வி : உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் கூட தாக்கல் செய்யப்பட்டனவே?

பதில் :- தேர்தல் நடத்தப்படவேண்டுமா?. தேர்தல் நடத்துவதால் இந்த நாட்டுக்கு நன்மையா தீமையா என்பதெல்லாம் வெவ்வேறுவிதமான கேள்விகள். இந்த நேரத்திலே தேர்தல்கள் நடத்தப்படவேண்டிய அவசியம் இல்லை. தேர்தல் நடத்தக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை. எங்களது பொருளாதார நிலை மிகக்கேவலமாக இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க இதனைக் கொண்டுவரவில்லை அதாவது உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான நடவடிக்கை எடுத்தது முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில். ஆகவே இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்க முன்னர் பொருளாதார நிலை தொடர்பாக நன்றாக உணர்ந்துகொண்டு. நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

கேள்வி :- அப்படியெனில் தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் சிறந்ததாக இருக்கின்றது எனக் கூறுகிறீர்களா?

பதில் :- தற்போது இருக்கக்கூடியவர்களுள் அவருக்குத்தான் அதைச் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. தற்போது அவர் சென்றுகொண்டிருக்கும் விதம் குற்றமுடையதாக எனக்குப்படவில்லை. ஆனால் அவர் தற்செயலாக அந்த இடத்திலிருந்து வெளியே வந்தால் அந்த இடத்தில் வருபவர் அரசாங்கத்தை மேன்மையடையக்கூடிய விதத்தில் கொண்டுவருவார் என்று எனக்குப்படவில்லை.


ஒரு பகுதியிலே தமிழ் மக்களது கோரிக்கைகளை செய்கிறேன் செய்கிறேன் என கூறிவிட்டு எதையும் செய்யாமல் இருக்கிறார். அவரது அரசியல் ரீதியான சிந்தனைகள் பற்றி எனக்கு கூறமுடியாது. மாமனாரும் கூட ஒரு நரிக்குணம் உடையவர் என்கிறார்கள். நாங்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றோம். அப்படியானவர்களுக்குத்தான் அங்கு இருந்து கொண்டு இவ்வாறான வேலைகளைச் செய்ய முடியும். சிங்கங்களுக்கு அல்லது பசு மாடுகளுக்கு செய்ய இயலாது. இந்த நரிகளுக்குத் தான் இந்த மாதிரியான வேலைகளை எல்லாம் செய்ய முடியும். ஆகவே நரிகள் நரி மாதிரி நடந்துகொண்டாலும் சில சில நன்மைகள் எங்களுக்கு வருவதால் அதை நாங்கள் மனதில் எடுத்து வருகிற நாட்களில் என்னவெல்லாம் செய்யலாம் எனச் சிந்திப்போம்.

ஆனால் இப்பொழுது வடமாகாணத்தில் நடந்து கொண்டிருப்பவற்றை நான் ஏற்கனவே ஜனாதிபதியிடம் சென்று கூறினேன். அவர் சரி என்றும் கூறிவிட்டிருக்கின்றார். இதுவரை செய்யவில்லை. இது அரசியல் ரீதியாகப் பார்த்தால் இழுத்து இழுத்து இறுதியாக ஒன்றைச் செய்தவுடன் அவர் எங்களுக்கு எதையோ செய்துவிட்டார் என்று பெருமூச்சுவிடுவோம். எப்போதோ செய்யவேண்டியதை பல மாதங்களுக்குப் பிறகு செய்தவுடன் எங்களுக்கு நன்மை தந்ததுபோல இருக்கும். அதில் எவ்வித நன்மையும் இல்லை. செய்யவேண்டிய அவசியமும் இல்லை. தொல்பொருள் திணைக்களம் தவறான சிந்தனையில் தவறான முறையில், விதத்தில் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக நீதிமன்றுக்கு செல்வதற்கு நான் சிலரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். அவ்வாறு செய்யக்கூடிய நிலைமை வந்தால் அதனையும் நாங்கள் செய்யலாம்.

**நேர்காணல் - இரணியன்**

# மூலிகை சுக வாழ்வு





**டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

*அரச பதிவு இலக்கம் - 10,294*
*மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி, நெல்லிப்பளை.*

மூலிகைகள் உயிர்ப்பு நிறைந்த பொருட்களாகும். மூலிகைகள் எமக்கு சக்தி அளிக்கும், உயிர் கொடுக்கும் - உயிர்ப்பிக்கும் தன்மை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. மனிதர்களின் உடலை மட்டுமல்லாது உள்ளத்தையும் உயிர்ப்பூட்டும் மூலிகைகளாகக் காணப்படுகின் றன. சிறிய மூலிகைகள் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றன.

சவால் மிக்க இக்கால கட் டத்தில் சுக வாழ்விற்கான மருத்துவத் தாவரங்களைப் (Healthy Medicinal plants) பற்றி சிந்திப்பதுடன், சுகவாழ்வு அளிக்கும் உயர் ஊட்டச்சத்து மிக்க மூலிகைகள் (Healthy nutritions herbs or higher nutrient content) பற்றிச் சிந்திப்பதும் அவசியம்.

உலகம் முழுவதும் மூலிகைகள் மீது ஆர்வம் அதிகரிக்கும் நிலையில், உலகமே எம்மை நோக்கிப் பார்க்கும் அளவுக்கு நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, வைரசுகளுக்கெதிரான நனோ மூலிகை இரசாயன பொருட்களைப் (Herbal Antiviral Nano Particles) பயன்படுத்தி வைரசுக்கு எதிரான போரில் வெற்றிக்கொள்வது போன்ற புதிய சிந்தனைகளை, புதிய பரிசோதனைகளை, புதிய பாதைகளை அமைப்பதுடன் மூலிகை, சிந்தனைகளுக்கு வலுவூட்டுவதுடன், குழந்தைகள், சிறார்களிடத்தில் மூலிகை மருத்துவ விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் சவால்களை எதிர்கொள்ளுதல், சாதிக்க முடியும் என்ற உறுதிப்பாடு தமிழர் அனைவரது உள்ளங்களிலும் ஊற்றெடுத்துப் பாயவேண்டும்.

பழமை வாய்ந்த குணப்படுத்தும் முறைமைகள் (Oldest disease curing methods), குணமாக்கும் மரபுவழி நிலைகளையும் (Curative traditions), உடலை, உள்ளத்தைச் சுத்தி செய்யும் (Cleans the System) முறைமைகளையும், எளிமையானதும் சிக்கலானதுமாக வழிமுறைகளையும் (Simple and Complex procedures), பாரம்பரிய மூலிகை மருத்துவ நலன் பேணுகை (Traditional herbal medical Care), நோய் எதிர்ப்புத்திறன் மேம்படுத்தும் Immunity boosting மூலிகைகள், மூலிகை நீராவி பிடித்தல் முறை (Steaming Using fresh leaves or medicinal plants), மூலிகை இலைக்கஞ்சி, மூலிகை சத்துமா, கலப்படமற்ற பாரம்பரிய உணவு (Unadulterated traditional food), சேதனப் பசளை பயன்படுத்தும் விவசாயத் தோட்டம் (Organic farming), சேதனப் பசளை பயன்படுத்தும் மூலிகைத் தோட்டம் (Organic herbal gardens), சிறுதானிய உணவுகள், சைவ ஆலயங்களில் பயன்படுத்தப்படும் மூலிகைகள், போசணை ஊட்டம் நிறைந்த சமநிலை உணவுகள், பழங்கள், காய்கறிகள் என்ற பல நிலைகளோடு இணைந்த வாழ்வியல் பண்பாட்டு நெறிமுறைகள் நோயில்லா நெறி என்ற பயணத்திற்கு அழைத்துச் செல்வதோடு கொரோனா போன்ற சிக்கல் நிலைகளைக் கூட வெற்றி கொள்வதற்கான நோய் எதிர்ப்புத் திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதற்கும் உதவியாகக் காணப்படுகின்றன.

இரசாயன வளமாக்கிகள், இரசாயன களை கொல்லிகள், இரசாயன பீடை நாசினிகள் என்று எமது விவசாய உலகத்தை ஆக்கிரமித்த இரசாயன உலகமானது நிலத்தையும், நீரையும் நஞ்சாக மாற்றியதுடன் எமது உணவையும் நஞ்சாக்கி உடலையும் நஞ்சாக்கி நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைத்துப்பல்வேறு நோய்களையும் பரிசாகத் தருகின்ற நிலைமையைக் காணலாம்.

சேதன இயற்கை விவசாய விளைப் பொருட்கள் நல்ல ருசி, மணம் கொண்டுள்ளதுடன், உடல் வன்மையைப் பெருக்குவதுடன் உடல்நோய் எதிர்ப்புச்சக்தி மேம்பாடு வழங்குவதுடன் சூழல் மாசுபடாமல் சூழலுக்கு நட்புறவுடனான (Eco Friendly) சூழ்நிலையையும் உருவாக்குகின்றது.

பாரம்பரிய நெல்லினங்களும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. சிறு தானியங்களும் உடல் வன்மையை, நோய் எதிர்ப்பு சக்தி அளிப்பதால் சிறு தானிய விவசாயம் ஊக்குவிக்கப்பட வேண்டும். மூலிகைகளை மாடித் தோட்டமாக வளர்ப்பதுடன், மூலிகைத் தோட்டங்களை வீடுகளில், கோயில்களில், நிறுவனங்களில், நூலகங்களில் அமைப்பதன் மூலம் சுக வாழ்வு, உடல் வன்மை, ஊட்டச் சத்துணவு, உடற்பயிற்சி, மூலிகை மருந்துகள், நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த பொருட்களை நாம் வாழும் சூழலில் பெற முடியும். மூலிகைத் தோட்டங்களும் சேதனப் பசளையிட்டு இயற்கை பீடை நாசினியுடன் மூலிகைப் பூச்சி விரட்டிகள் (Organic firming) வளர்க்கப்பட வேண்டும்.

மஞ்சள், நொச்சி போன்ற மூலிகைகளை கொதிநீரிலிட்டு ஆவிபிடிக்கும் முறைகள் சித்தமருத் துவச் செவ்வியல் நூல்களில் (Classical lexis) கூறப்பட் டுள்ளது. இது சளியை நீர்த் தன்மையாக்குவதுடன் சளியைக் குறைப்பதற்கும் (Steam liquefies and reduces phlegm), சுவாசப் பாதைத் தடைகளை (Obstruction of the nasal passage) குறைப்பதுடன் வைரசு, பற்றீரியா போன்ற நுண்ணங்கிகள் (Micro Organisms) செயற்திறனைக் குறைக்கச் செய்யும்.

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ துறையா னது பல்கலைக்கழக சித்த மருத்துவ விரிவுரையாளர்க ளையும் சமூகத்திலுள்ள சித்த மருத்துவ புலமை சார் அறிஞர்களையும் சேர்த்துப் புதிதாக ஏற்படுகின்றதொற்று நோய்களுக்கான செயலணிக் குழுவை உருவாக்கி மூலிகை மருத்துவ ஆய்வுகளை விரைவாக முன்னெடுப்பதுடன், ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளது போன்று ஆய்வறிஞர் (Research fellow), இணை ஆய்வறிஞர் (Rasearch Associate), உதவி ஆய்வறிஞர் (Research Assistant) போன்ற பதவி நிலைகளை உருவாக்கி சமூகத்திலுள்ள மூலிகை மருத்துவ புலமையாளர்களை உள்வாங்கி மூலிகை மருத்துவ ஆய்வுகளை முன்னெடுப்பதுடன் சமூகத்திலுள்ள சித்த மருத்துவ புலமை சான்றோர்களை வருகைநிலை விரிவுரையாளர்களாகப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயன்படுவதுடன் மாணவர்களை மலரும் மூலிகை மருத்துவ விஞ்ஞானிகளாக உருவாக்கி செயற்பட வைப்பதுடன், சித்தமருத்துவ நிபுணத்துவ பட்டப் பின் படிப்பு கற்கை நெறி M.D (Siddha medicine) உருவாக்கப்பட்டு தமிழர் சமூகத்தில் பல சித்த மருத்துவ நிபுணர்களை உருவாக் கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

சித்த மருத்துவ அறிஞர்களான டாக்டர்.அ இராசரத்தினம், டாக்டர். பூ உரோமகேஸ்வரன் போன்ற வர்களுக்கு மதிப்புறு முனைவர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மேற்கொள்ளாமை வேதனைக்குரியது.



# விளையாட்டு

## 3 மொழிகளுக்கு வர்ணனையாளர்கள் அறிவிப்பு



உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி ஜூன் மாதம் 7-ம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் மோத உள்ளன. டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டி 2019-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. சவுத்தாம்ப்டனில் நடந்த முதல் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி சாம்பியன் ஆனது.

தற்போது 2-வது டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா விளையாட உள்ளது. ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வெல்லுமா என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இந்த போட்டிக்கான ஒளிபரப்பு உரிமையை பெற்றுள்ள ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் வர்ணனையாளர்கள் பட்டியலை அறிவித்துள்ளது.

இதில் ஆங்கில வர்ணனைக்கு ரவி சாஸ்திரி, சுனில் கவாஸ்கர், மேத்யூ ஹைடன் மற்றும் நாசர் ஹூசைன் ஆகியோரும், ஹிந்தி வர்ணனைக்கு ஹர்பஜன் சிங், சவுரவ் கங்குலி, தீப் தாஸ்குப்தா மற்றும் எஸ். ஸ்ரீசாந்த் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ் மொழி வர்ணனைக்கு யோ மகேஷ், எஸ். ரமேஷ், எல்.பாலாஜி மற்றும் எஸ்.ஸ்ரீராம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சாதனையை முறியடித்த ஜோ ரூட்

இங்கிலாந்து - அயர்லாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி தொடங்கியுள்ளது. இப்போட்டியில் டொஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. அதை தொடர்ந்து களமிறங்கிய அயர்லாந்து முதல் இன்னிங் ஸில் 172 ரன்களுக்கு சுருண்டது. அதை தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 524 ரன்கள் குவித்து டிக்ளர் செய்தது. ஜேக் கிராவ்லி 56 (45) ரன்களும், பென் டன்கட் சதமடித்து 24 பவுண்டரி 1 சிக்சருடன் 182 (178) ரன்களை விளாசினார். ஒலி போப் இரட்டை சதமடித்து 22 பவுண்டரி 3 சிக்சருடன் 205 (208) ரன்கள் விளாசினார்.

ஜோ ரூட் 4 பவுண்டரி 1 சிக்ஸ ருடன் 56 (59) ரன்கள். அதைத்தொடர்ந்து 352 ரன்கள் பின் தங்கிய நிலைமையில் களமிறங்கிய அயர்லாந்து 2-வது நாள் ஆட்டநேரம் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 97 எடுத்திருந்தது. இப்போட்டியில் 56 ரன்கள் எடுத்த ஜோ ரூட் டெஸ்ட் கிரிக்கெட்டில் 11,000 ரன்களை கடந்த 2-வது இங்கிலாந்து வீரராக சாதனை படைத்தார். அதைவிட டெஸ்ட் கிரிக்கெட்டில் 11,000 ரன்களை மிகவும் இளம் வயதில் எடுத்த 2-வது வீரர் என்ற இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் சாதனையும் முறியடித்து அவர் புதிய சாதனை படைத்துள்ளார்.

## அலியார் பைசர் இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் உப தலைவராக தெரிவு



கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையின் முன்னோடி ஆசிரியர் அலியார் பைசர் இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் உப தலைவராக 2023/2027 ஆகிய நான்கு ஆண்டு காலப் பகுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிருவாக சபை தேர்தலும் விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தேர்தல் குழுவின் தலைமையில் இலங்கை பெட்மின்டன் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

உப தலைவர் பதவிக்காக 16 பேர் கடந்த ஏப்ரல் மாதம் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் ஒருவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. அத்துடன் மூவர் தமது வேட்பு மனுவை வாபஸ் வாங்கிக் கொண்டனர். ஏழு பேர்கள் உப தலைவர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்கு இணங்க அலியார் பைசர் அவர்களும் அதில் ஒருவராக அதிகப்படியான வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டார். வடக்கு, கிழக்கை சேர்ந்த ஒரு சிறுபான்மை இனத்தவர் இலங்கையின் தேசிய விளையாட்டு சங்கமான இலங்கை பெட்மின்டன் சங்கத்துக்கு உப தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையும் வரலாற்று மைக் கல்லாகவும் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அலியார் பைசர் அவர்கள் கிழக்கு மாகாண பெட்மின்டென் சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும் மற்றும் அம்பாறை மாவட்ட பெட்மின்டன் சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். இவர் பெட்மின்டன் துறையில் பல்வேறு தகமைகளையும் செயற்பாட்டு உத்திகளையும் தன்னகத்தே கொண்டுள்ளார். இவர் உலக பெட்மின்டன் சம்மேளனத்தின் BWF Level – I பயிற்சியாளராகவும் ஆசிய பெட்மின்டன் சம்மேளனத்தின் BAC Level – II பயிற்சியாளராகவும் இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் SLBA Level – I பயிற்சியாளராகவும் விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் விசேட வெளிநாட்டு புலமைப்பரிசில் மூலம் மலேசியாவில் பயிற்சியளிக்கப்பட்ட NISS உயர் பயிற்சியாளராகவும் தகைமைகளை பெற்றுள்ளார்.

இவரது வினைத்திறனையும் தகைமைகளையும் அறிந்த இலங்கை பெட்மின்டன் சங்கம் 70 ஆவது பெட்மின்டன் சாம்பியன்ஷிப் சுற்றுப்போட்டியில் பிரதிப் பணிப்பாளராக நியமனம் செய்து கௌரவப்படுத்தியது. மற்றும் இலங்கை 2032 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பொதுநலவாய போட்டிகளில் அடைவு மட்டத்தை எவ்வாறு அடைய வேண்டும் என்பதற்கான Strategic Plan ஐ வரைந்து பெட்மின்டன் வளர்ச்சிக்கான திட்டத்தினை சமர்ப்பித்து எல்லோருடைய கௌரவத்தினையும் பெற்றுக் கொண்டார் என்பது இருப்பிடத்தக்க விடயமாகும்.

அலியார் பைசர் அவர்கள் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலினால் நடத்தப்பட்ட Special Sports Administrator பயிற்சி நெறியில் சித்தியடைந்ததுடன் Athlete 365 மற்றும் Competition Manipulation பாட நெறிகளில் உயர் சித்தியை பெற்றுள்ளார். இவரது தகைமைகளையும் தராதரங்களையும் விளையாட்டின் மீது கொண்டுள்ள ஆர்வத்தினையும் கருத்தில் கொண்டு இலங்கை தேசிய ஒலிம்பிக் கவுன்சில் 2022/2026 கல்வி குழு உறுப்பினராக கடந்த வருடம் தெரிவு செய்தது.

பிரதேசம், மாவட்டம், மாகாணம் மட்டுமன்றி தேசிய ரீதியாகவும் விளையாட்டு துறைக்கு பல்வேறுபட்ட சேவைகளையும், உதவிகளையும் வழங்கியுள்ளார். இவரது வழிகாட்டலில் பல்வேறு துறைசார் மாணவர்கள் பட்டதாரிகளாக, உடற்கல்வி ஆசிரியர்களாக, விளையாட்டு உத்தியோகத்தர்களாக, பாடசாலை பயிற்றுவிப்பாளர்களாக, சர்வதேச மற்றும் தேசிய மத்தியஸ்தர்களாக, பயிற்சியாளர்களாக திகழ்கிறார்கள்.

## டிக்கெட் விலையின் அறிவிப்பை கண்டு சீன ரசிகர்கள் கடும் அதிருப்தி

சீனாவின் பெய்ஜிங் நகரில் உள்ள ஒர்க்கர்ஸ் மைதானத்தில் வரும் 15ம் திகதி நட்பு ரீதியிலான கால்பந்து போட்டி நடைபெறுகிறது.

இதில் லயோனல் மெஸ்ஸி இடம் பெற்றுள்ள அர்ஜெண்டினா அணியானது ஆஸ்திரேலியாவை எதிர்த்து விளையாட உள்ளது.

போட்டி நடைபெறும் மைதானத்தில் சுமார் 68 ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்து போட்டியை கண்டுகளிக்கலாம்.

இந்த போட்டிக்கு 60,761.00 முதல் 555,964.00 வரையிலான டிக்கெட் விற்பனை இரு கட்டங்களாக வரும் 5 மற்றும் 8ம் திகதிகளில் ஆரம்பிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

டிக்கெட் விலையின் அறிவிப்பை கண்டு சீன ரசிகர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இதுதொடர்பாக சமூக வலைதளங்களில் அவர்கள், போட்டி ஏற்பாட்டாளர்களை வசை பாடி உள்ளனர். இதற்கிடையில் இணையதளத்தில் டிக்கெட் விற்பனை செய்யும் சீன நிறுவனம் ஒன்று அர்ஜெண்டினா - ஆஸ்திரேலியா போட்டிக்கான விஐபி டிக்கெட்டின் விலை ரூ.2,009,868.00 என அறிவித்துள்ளது.

## துணை பயிற்சியாளராக ஹூப்பர் நியமனம்



10 அணிகள் இடையிலான 13-வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடக்கிறது. இந்த போட்டிக்கு சூப்பர் லீக் மூலம் புள்ளிபட்டியலில் டொப்-8 இடங்களை பிடித்த நியூசிலாந்து, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, வங்காளதேசம், இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், தென்ஆப்பிரிக்கா ஆகிய 8 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுவிட்டன.

மீதமுள்ள இரு அணிகளை தேர்வு செய்வதற்கு தகுதி சுற்று போட்டி நடத்தப்படுகிறது. அதன்படி தகுதி சுற்று போட்டி அடுத்த மாதம் (ஜூன்) 18-ந் திகதி முதல் ஜூலை 9-ந் திகதி வரை ஜிம்பாப்வேயில் 4 மைதானங்களில் நடைபெறுகிறது. இதில் 10 அணிகள் கலந்து கொண்டு மோதுகின்றன. அவை இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் முன்னாள் சாம்பியன் வெஸ்ட் இண்டீஸ், ஜிம்பாப்வே, நெதர்லாந்து, நேபாளம், அமெரிக்கா, 'பி' பிரிவில் முன்னாள் சாம்பியன் இலங்கை, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஓமன், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும்.

லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 6 சுற்றை அடையும். இந்நிலையில் இதை கருத்தில் கொண்டு வெஸ்ட் இண்டீஸ் அணியின் துணை பயிற்சியாளராக முன்னாள் வீரர் ஹூப்பர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தகுதி சுற்றுக்கு முன்னதாக அணியில் இணையவுள்ளார்.

15 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கிந்திய தீவுகளுக்காக விளையாடி உள்ளார். 329 சர்வதேச போட்டிகளில் விளையாடி 10,500 ரன்களுக்கு மேல் அடித்துள்ளார். ஹூப்பர் பல்வேறு நிலைகளில் பயிற்சியாளராகவும் வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். 56 வயதான அவர் பிக் பாஷ் லீக்கில் அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியின் உதவி பயிற்சியாளராகவும் கரீபியன் பிரீமியர் லீக்கில் ஆன்டிகுவா ஹாக்ஸ்பில்ஸ் மற்றும் கயானா அமேசான் வாரியர்ஸ் அணியின் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

## அரையிறுதியில் இந்திய வீரர் லக்சயா சென் தோல்வி

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் தொடரில் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவின் அரையிறுதியில் இந்தியாவின் லக்சயா சென், தாய்லாந்து வீரருடன் மோதினார்.

இதில் இந்திய வீரர் லக்சயா சென் முதல் செட்டை வென்றார். சுதாரித்துக் கொண்ட தாய்லாந்து வீரர் அடுத்த இரு செட்களை 21-17, 21-13 என்ற கணக்கில் வென்றார். இந்த தோல்வியின் மூலம் தாய்லாந்து ஓபன் தொடரில் இருந்து இந்திய வீரர் லக்சயா சென் வெளியேறினார்.



# உலக வலம்

## பாகிஸ்தானில் கடும் உணவு தட்டுப்பாடு அபாயம்




பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. அந்நாட்டின் அன்னிய செலாவணி இருப்பு குறைந்து வருவதால் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவு பொருட்கள், பெட்ரோல், டீசல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது.

மேலும் கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. பாகிஸ்தானில் அரசியல் கொந்தளிப்பும் நிலவி வருவது அந்நாட்டை மேலும் சிக்கலில் தள்ளி உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தானில் வரும் மாதங்களில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. சபை வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் கூறியிருப்பதாவது, பாகிஸ்தானில் 2022-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவுகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் கொந்தளிப்பு தீவிரமடைந்துள்ளதால் கடுமையான உணவு பாதுகாப்பின்மை அடுத்த மாதங்களில் உயரக் கூடும்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவுகளால் நிலைமை மோசமாகி உள்ளது. இது விவசாய துறையில் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியது. உணவு உற்பத்தி, உணவு கிடைப்பது, வாழ்வாதார சாதியக் கூறுகளை பாதித்தது. பொருளாதார நெருக்கடியால் உணவு மற்றும் பிற முக்கிய பொருட்களை குடும்பங்கள் வாங்கும் சக்தி குறைந்து இருக்கின்றன.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை, பணத்தின் மதிப்பு குறைந்து வருவது ஆகியவை நாட்டின் முக்கிய உணவு மற்றும் எரிசக்தி விநியோகங்களை இறக்குமதி செய்வதற்கான திறனை குறைக்கின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கை வருகிற ஜூன் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்தை உள்ளடக்கியது.

ஏற்கனவே பாகிஸ்தானில் உணவு பற்றாக்குறை ஏற்படும் என்று ஐ.நா. சபை தெரிவித்திருந்த நிலையில் மீண்டும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. அதேபோல் ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான், ஏமன், ஹைட்டி, சூடான் புர்கினா பாசோ, மாலி உள்பட 22 நாடுகளில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று ஐ.நா சபை தெரிவித்து உள்ளது.

## மனித உடல் உறுப்புகளுடன் 45 பைகள் கண்டெடுப்பு



மேற்கு மெக்சிகோ, ஜலிஸ்கோ பகுதியில் உள்ள பள்ளத்தாக்கில் மனித உடல் உறுப்புகளுடன் குறைந்தது 45 பைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த மே மாதம் 20ம் திகதி முதல் காணாமல் போன 30 வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்கள் என 7 பேரை தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் 7 பேரும் வெவ்வேறு நாட்களில் காணாமல் போனதும், ஆனால் இவர்கள் 5 பேரும் ஒரே கோல் சென்டர் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தது புலனாய்வு விசாரணையில் தெரியவந்தது.

இந்நிலையில், பெரிய தொழில்துறை மையமான குவாடலஜாராவின் புறநகர்ப் பகுதியில் ஜபோபன் நகராட்சியில் 40 மீட்டர் (120 அடி) பள்ளத்தாக்கின் அடிப்பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை அன்று மனித உடல் உறுப்புகள் கொண்ட 45 பைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், "45 பைகளில் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் சொந்தமான மனித உடல் உறுப்புகள் இருந்தன.

தடயவியல் நிபுணர்கள் மனித உறுப்புகளின் அடையாளங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். ஆனால், இவை கண்டுபிடிக்கப்பட்ட அதே பகுதியில் தான் சம்பந்தப்பட்ட கோல் சென்டரும் இயங்கி வருகிறது. இதன் முதற்கட்ட விசாரணையில், கோல் சென்டர் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என தெரிகிறது.

மேலும், இது தொடர்பான முக்கிய ஆவணங்களையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாக மாற்ற கோல் சென்டர் நிறுவன அதிகாரிகள் முயல்வதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகிறோம்" என்றார். இதுபோன்று கடந்த 2021ம் ஆண்டில் ஜாலிஸ்கோவில் உள்ள டோனாலா நகராட்சியில், 11 பேரின் மனித உடல் உறுப்புகளுடன் சுமார் 70 பைகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் 2019ம் ஆண்டில், ஜபோபனின் மக்கள் தொகை இல்லாத பகுதியில் 119 பைகளில் 29 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

## ஒவ்வொரு சிகரெட்டிலும் எச்சரிக்கை வாசகம்

கனடாவில் விற்பனையாகும் சிகரெட் பெட்டிகளில் உள்ள ஒவ்வொரு சிகரெட்டிலும் சுகாதார எச்சரிக்கை வாசகங்கள் அச்சிட அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. பொது மக்கள் மத்தியில் சிகரெட் பயன்பாட்டை குறைக்கும் வகையில் கனடா அரசு விழிப்புணர்வு நடவடிக்கையை எடுத்துள்ளது. சிகரெட் பெட்டிகளின் மேல் சுகாதார எச்சரிக்கை வாசகம் அச்சிடப்பட்டிருக்கும். அதுவே தற்போது ஒவ்வொரு சிகரெட்டிலும் ஒவ்வொரு எச்சரிக்கை வாசகம் அச்சிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது, ஒவ்வொரு சிகரெட்டிலும் புகையிலையின் புகை குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும், புகையிலை புற்றுநோய் உருவாவதற்கு ஒரு காரணம், ஒவ்வொரு புகைச்சலிலும் விஷம் உள்ளது போன்ற வாசகங்கள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் அச்சிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கனடா நாட்டின் சுகாதார அமைச்சர் ஜீன் யூவ்ஸ் டுக்லோஸ் கூறியதாவது, புகையிலை பயன்பாடு கனடாவின் மிக முக்கியமான பொது சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாகத் தொடர்கிறது. இது, நோய் மற்றும் அகால மரணத்தைத் தடுக்கக்கூடிய நாட்டின் முன்னணி காரணமாகவும் அமைந்துள்ளது.




உலக புகையிலை எதிர்ப்பு தினத்தில் புகையிலைக்கு எதிராக எச்சரிக்கை வாசக விழிப்புணர்வு திட்டத்தை அறிமுகம் செய்து, உலகின் முதல் நாடாக கனடா திகழ்கிறது. 2035ம் ஆண்டிற்குள் புகையிலை நுகர்வு 5 சதவீதத்திற்கும் குறைவாக குறைக்கப்பட வேண்டும் என்ற கனடாவின் இலக்கின் ஒரு பகுதியாக இந்த கட்டுப்பாடு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இந்த புதிய விதிகள் ஒகஸ்ட் 1ம் திகதி முதல் படிப்படியாக நடைமுறைக்கு வரும்.

புகையிலை தயாரிப்பு கட்டுகளை விற்கும் சில்லறை விற்பனையாளர்கள் ஏப்ரல் 2024ம் ஆண்டு இறுதிக்குள் புதிய எச்சரிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். கிங் சைஸ் சிகரெட்டுகளில் ஜூலை 2024 இறுதிக்குள் தனிப்பட்ட எச்சரிக்கைகள் இருக்க வேண்டும். அதைத்தொடர்ந்து வழக்கமான அளவிலான சிகரெட்டுகள் மற்றும் பிற தயாரிப்புகள் ஏப்ரல் 2025 இறுதிக்குள் எச்சரிக்கை இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உலகின் நம்பர் 1 பணக்காரர் ஆனார் எலான் மஸ்க்



டெஸ்லா இன்க் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க் மீண்டும் உலகின் முதல் பணக்காரர் என்ற அந்தஸ்த்தை பெற்று இருக்கிறார். இவர் பெர்னார்டு அர்னால்டை பின்னுக்குத் தள்ளி மீண்டும் உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறி இருக்கிறார்.

மே 31-ம் திகதி அர்னால்டு LVMH பங்குகள் 2.6 சதவீதம் வரை சரிந்ததை தொடர்ந்து, பணக்காரர்கள் பட்டியலில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. பிரெஞ்சு வியாபாரியான 74 வயது பெர்னார்ட் மற்றும் எலான் மஸ்க் இடையே உலகின் பணக்காரர் யார் என்பதில், இந்த ஆண்டு துவங்கியதில் இருந்தே கடும் போட்டி நிலவி வந்தது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அர்னால்ட் எலான் மஸ்க்-ஐ கடந்து உலகின் முன்னணி பணக்காரர் என்ற அந்தஸ்தை பெற்றார். தொழில்நுட்ப துறையில் பெரும் சரிவு நிலை நிலவி வந்த போது, அர்னால்ட் உலகின் முதல் பணக்காரர் ஆனார். லூயிஸ் விட்டன், ஃபெண்டி மற்றும் ஹெனசி போன்ற பிராண்டுகளை நிறுவியவர் அர்னால்ட். கடந்த ஏப்ரல் மாதம் துவங்கியதில் இருந்தே, LVMH பங்குகள் பத்து சதவீதம் வரை சரிவடைந்து வருகின்றன. ஒரு கட்டத்தில் அர்னால்ட் சொத்து மதிப்பு ஒரே நாளில் 11 பில்லியன் டொலர்கள் வரை சரிந்தது.

மறுபக்கம் எலான் மஸ்க் இந்த ஆண்டு 55.3 பில்லியன் டொலர்களை ஈட்டியிருக்கிறார். இதில் பெரும்பாலான வருவாய் டெஸ்லா நிறுவனத்தில் இருந்து கிடைத்தவை ஆகும். ஆஸ்டினை சேர்ந்த எலான் மஸ்க்-ன் மொத்த சொத்து மதிப்பு 192.3 பில்லியன் டொலர்களாக மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அர்னால்ட்டின் சொத்து மதிப்பு 186.6 பில்லியன் டொலர்கள் ஆகும்.

## செனகல் மோதலில் 09 பேர் உயிரிழப்பு



மேற்கு ஆப்பிரிக்க நாடான செனகலில் எதிர்க்கட்சி தலைவர் உஸ்மான் சோன்கோ வழக்கு ஒன்றில் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதையடுத்து அவரது கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

தலைநகர் டக்கார் மற்றும் தெற்கில் உள்ள ஜிகுயின்ச்சோர் நகரில் பெரும் வன்முறை மூண்டது. வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. வன்முறையை ஒடுக்க பொலீசார் நடவடிக்கை எடுத்தனர். இதில் போலீசாருக்கும், எதிர்க்கட்சி தலைவரின் ஆதரவாளர்களுக்கும் பல இடங்களில் மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்புகை குண்டுகள் வீசப்பட்டன. இந்த மோதலில் 9 பேர் பலியானார்கள். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இதையடுத்து சமூக ஊடக தளங்களுக்கு அரசாங்கம் தடை விதித்து உள்ளது. இது தொடர்பாக உள்துறை மந்திரி அன்டோயின் பெலிக்ஸ் அப்துலே டியோம் கூறும்போது, "வன்முறையை தூண்டுவதற்காக போராட்டக்காரர்கள் பயன்படுத்திய சில சமூக ஊடக தளங்களான பேஸ்புக், வாட்ஸ்அப், டுவிட்டர் போன்றவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது" என்றார்.

## 2024 பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் மக்களை ஆச்சரியப்படுத்தும் - ராகுல் காந்தி

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி 10 நாட்கள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். முதலில் சான்பிரான்சிஸ்கோ நகரின் சாண்டா கிளாராவில் நடந்த நிகழ்ச்சியில் அமெரிக்க வாழ் இந்தியர்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார்.

இந்நிலையில், வாஷிங்டன் டிசியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ராகுல் காந்தியிடம் பலவேறு கேள்விகள் கேட்கப்பட்டன. அதில், கர்நாடக தேர்தல் வெற்றி பாராளுமன்ற தேர்தலிலும் தொடருமா என கேள்வி எழுப்பினர். அப்போது பேசிய ராகுல் காந்தி, எதிர்க்கட்சிகள் நன்றாக ஒன்றுபட்டுள்ளன. அது மேலும் மேலும் ஒன்றிணைந்து வருகிறது. அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அங்கே நிறைய நல்ல வேலைகள் நடக்கின்றன என்று நினைக்கிறேன். எதிர்க்கட்சிகளுடன் போட்டியிடும் இடங்கள் இருப்பதால் இது ஒரு சிக்கலான விவாதம்.

எனவே கொஞ்சம் கொடுக்கல் வாங்கல் தேவை. ஆனால் அது நடக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். வரும் 2024 பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் மக்களை ஆச்சரியப்படுத்தும் என தெரிவித்தார்.














இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 04.06.2023 அன்று வெளியிடப்பட்டது.